கணபதி துணை.

சுப்பிரமணியசுவாமி வரப்பிரசாதியாய்த்

திருவண்ணாமலையில்

எழுந்தருளியிருந்த

# அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# திருவகுப்பு.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

## சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஐந்தாம் பதிப்பு.

குரோதி ௵ புரட்டாசி ௴.

இதன்விலை அணா - ௨.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சீர்பாதவகுப்பு முதற் பதினெட்டே அருணகிரிநாதராற் பாடப்பட்டவையென்று பலருஞ்சொல்கின்றனர். அப்படியே பழைய பலபிரதிரூபங்களில் இருக்கின்றன. சிலபிரதிரூபங்களிலே இருபத்தொன்று முப்பத்திரண்டுவரையும் அதிகப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆராயும்போது பதினெட்டின் மேற்பட்டவை அவர்வாக்குகளாகத் தோன்றவில்லை. அன்றியும் சில சந்தச்சிதைவுகளாயும் அகவல்களாயும் இருக்கின்றன. ஆதலினால், அந்தப்பதினெட்டும் முன் வைத்தும், மற்றவைகளிலே சந்தமுடைய எழுவகுப்புக்கள் அவற்றின் பின் வைத்தும், பதிப்பிக்கப்பட்டன.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவகுப்பு.

முதலாவது

## சீர்பாதவகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன, தனதான தானதன *

உததியிடை கடவுமரகதவருண குலதுரக வுபலளித
கனகரத, சதகோடி சூரியர்கள் *
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை யுகமுடிவி
னிருள்கல, வொருசோதி வீசுவதும் *
உடலுமுட லுயிருநிலைபெறுதல்பொருளெனவுலகமொரு
விவரு மனுபவன, சிவயோக சாதனையில் *
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி யுணர்வுவிழி
கொடுநியதி, தமதூடு நாடுவதும் *
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு முழலு
வன பரசமய, கலையார வாரமற *
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ வுளபடியை
யுணருமவ, ரநுபூதி யானதுவும் *
உறவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய வுருவு
டைய மலினபவ, சலராசி யேறவிடும் *
உறுபுணையு மறிமுகமு முயரமரர் மணிமுடியி லுறைவதுவு
முலைவிலது, மடியேன் மனோரதமும் (வ)

இதழிவெகு முககக்கண நதியறுகு தறுகணர விமகிரண தரு
ணைவுடு, பதிசேர்ச டாமவுலி *

இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலெனு விமை
யமயி றழுவுமொரு, திருமார்பி லாடுவதும் *

இமையவர்க ணகரிலிறை குடிபுகுத நிருதர்வயி றெரிபுகுத
வுரகர்பதி, யபிஷேக மாயிரமும் *

எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய விளைய
தளர் நடைபழகி, விளையாடல் கூருவதும் *

இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயு மிலகு
வெகு கடவிகட, தடபார மேருவுடன் *

இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற வெழுபுவியை
யொருநொடியில், வலமாக வோடுவதும் *

எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை யிரலைமரை
யிரவுபக, விரைதேர்க டாடவியில் *

எயினரிடு மிதணதணி விளகுதினை கிளிகடிய வினிதுபயில்
சிறுமிவளர், புனமீது லாவுவதும் (௭)

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு முது
வடவை விழிசுழல, வருகால தூதர்கெட *

முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை முடியவரு
வதுமடியர், பகைகோடி சாடுவதும் *

மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு முறி
யுமலர் வகுளதள, முழுநீல தீவரமும் *

முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத முனிவர்
கரு தரியதவ, முயல்வார்த பொபலமும் *

முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு முககுமர சர
ணமெனை, வருள்பாடி யாடிமிக *

மொழிகுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி முழுகு
வதும் வருகவென, வறைகூவி யாளுவதும் *

முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு துல
கறிய மழலைமொழி, கொடுபாடு மாசுகவி *

முதலமொழி வணங்கிபுண மதுபமுக ரிதமவுன முகுளபரி
மளநிகில, கவிமாலை சூடுவதும் (ஞ)

மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய மடுகவெவில்
வெருவியொரு, விசையாதி மூலமென *

வருகருணை வரதனிக விரணியனை நுதியுகிரின் வகிருமட
லரிவடிவு, குறளாகி மாபலியை *

வலியசிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய வளரு
முகி னிருதனிரு, பதுவாகு பூதரமும் *

மகுடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின் மருகனிசி
சரர்தளமும், வருதார காசுரனும் *

மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி மறுகிமுறை யிட
முனியும், வலிவேல னீலகிரி *

மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர வசனிபயி ரவிக
வுரி, யுமையாள்த்ரி சூலதரி *

வனசைமது பதியமலை விசயைதிகி புரைபுனிதை வனிதை
யபி நவையனகை, யபிராம நாயகிதன் *

மதலைமலை கிழவனனு பவனபய னுபயசதுர் மறையின்முத
னடுமுடிவின், மணநாறு சீறடியே. (க)

சீர்பாதவகுப்பு முற்றிற்று.

இரண்டாவது

## தேவேந்திரசங்கவகுப்பு

தனதன தனதன தனதன தனதன தனதன தனதன,
தானந்தன தந்தன தானந்தன தந்தன *

திரணியி லரணிய முரணிர ணியனுட றனைநக நுதிகொடு,
சாடோங்குநெ டுங்கிரி யோடேந்துப யங்கரி *

தமருக பரிபுர வொலிகொடு நடநவில் சரணிய சதுர்மறை,
சாதாம்புய மந்திர வேதாந்தப ரம்பரை *

சரிவளை விரிசடை யெரிபுரை வடிவினள் சததள முகுளித,
தாமாங்குச மென்றிரு தாளாந்தர வம்பிகை *

தருபதி சுரரொடு சருவிய வசுரர்க டடமணி முடிபொடி,
தானும்படி செங்கையில் வாள்வாங்கிய சங்கரி (௫)

இரணகி ரணமட மயின்மிர்க மதபுள கிதவிள முலையிள,
நீர்தாங்கிநு டங்கிய நூல்போன்றம ருங்கினள் *

இறுகிய சிறுபிறை யெயிறுடை யமபட ரெனதுயிர்
கொளவரின், யானேங்குதல் கண்டெதிர் தானென்றுகொ
ளுங்குயில் *

இடுபலி கொடுதிரி யிரவல ரிடர்கெட விடுமென கரதல,
வேகாம்பரை யிந்திரை மோகாங்கசு மங்கலை *

எழுதிய படமென விருளறு சுடரடி யிணைதொழு மவு
ளிக, ளேகாந்தசு கந்தரு பாசாங்குச சுந்தரி (௰)

கரணமு மரணமு மலமொடு முடல்படு கடுவினை கெட
நினை, காலாந்தரி கந்தரி நீலாஞ்சனி நஞ்சுமிழ் *

கனலெரி கணபண குணமணி யணிபணி கனவளை மரகத,
காசாம்பர கஞ்சுளி தூசாம்படி கொண்டவள் *

கணைகழ லிணையல ருயிரவி பயிரவி கவுரிக மலைகுழை,
காதார்ந்தசெ ழுங்கமு நீர்தோய்ந்தபெ ருந்திரு *

கரைபொழி திருமுக கருணையி லுலகெழு கடனிலை பெற
வளர், காவேந்திய பைங்கிளி மாசாம்பவி தந்தவன் (௯)

அரனெடு வடவரை யடியொடு பொடிபட வலைகடல் கெட
வயில், வேல்வாங்கிய செந்தமிழ் நூலோன்கும ரன்குகன் *

அறுமுக னொருபதொ டிருபுய னபிநவ னழகிய குறமக,
டார்வேய்ந்தபு யன்பகை யாமாந்தர்க ளந்தகன் *

அடன்மிகு கடதட விகடித மதகளி றணவர தழுமக, லாமா
ந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்பட்டி செந்திலில் *

அதிபதி யெனவரு பொருதிறன் முருகனை யருள்பட
மொழிபவ, ராராய்ந்துவ ணங்குவர் தேவேந்திர சங்கமே. (௧)

தேவேந்திரசங்கவகுப்பு முற்றிற்று.

---

## மூன்றாவது

# வேல்வகுப்பு.

தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்ததன தனத்த
தன தனத்ததன, தனத்ததன தான *

பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்தவிதழ் மறச்சிறுமி, விழிக்குநிக ராகும் *

பணைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள் பதத்
திடுநிக ளத்துமுளை, தெறிக்கவர மாகும் *

பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்புலவ
னிசைக்குருகி வரைக்குகையை, யிடித்துவழி காணும் *

பசித்தலகை முசித்தழுது முறைப்படுதெலொழித்தவுண ருர
த்துதிர நிணத்தசைகள், புசிக்கவருஞ் ணேரும் (வ)

சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி தனக்குமரி தனக்
குநரர் தமக்குமுறு, மிடுக்கண்வினை சாடும் *

சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி யொளிப்பவலை
யடக்குதழ லொளிப்பவொளி, ரொளிப்பிரபை வீசும் *

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர்
குலத்தைமுத லறக்களையு, மெனக்கொர்துணை யாகும் *

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை யறு
த்தெறிய வுறுக்கியெழு, மறத்தைநிலை காணும் (௭)

தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி தரித்தமுடி படைத்
தவிறல் படைத்தவிறை, கழற்குநிக ராகும் *

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண வழைப்பதென
மலர்க்கமல கரத்தின்முனை, விதிர்க்கவளை வாகும் *

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
புறத்துமரு கடுத்திரவு, பகற்றுணைய தாகும் *

சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்ததொடை யெனச்சிகையில், விருப்பமொடு சூடும் (௯)

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது குடித்துடையு
முடைப்படைய வடைத்துதிர, நிறைத்துவிளை யாடும் *

திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை முளைத்ததென
முகட்டினிடை பறக்கவற, விசைத்ததிர வோடும் *

சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு குறைத்தலை
கள் சிரித்தெயிறு கடித்துவிழி, விழித்தலற மோதும் *

திருவேளைக்காரனவகுப்பு.

திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை விருத்தனென
துளத்திலுறை கருத்தன்மயி, னடத்துகுகன் வேலே. (க)

வேல்வகுப்பு முற்றிற்று.

---

நான்காவது

## திருவேளைக்காரன்வகுப்பு.

தானதன தத்ததன தானதன தத்ததன தானதன தத்த
தன, தானத் தானன *

ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது வாகநிகழ் பத்
தசன, வாரக் காரனும் *

ஆரமது ரித்தகனி காரணமு தற்றமைய னுருடனு ணக்கை
பரி, நிமைக் காரனும் *

ஆகமம்வி ளைத்தகில லோகமுநொ டிப்பளவி லாசையொடு
சுற்றுமதி, வேகக் காரனும் *

ஆணவவ ழுக்கடையு மாவியைவி ளக்கியரு ளூதியடை
வித்ததொரு, பார்வைக் காரனும் *

ஆடலைவு பட்டமரர் நாடதுபி ழைக்கவம ராவதிபு ரக்கு
மட, லாண்மைக் காரனும் *

ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு ணைபுரியி னிற்கு
மடை, யாளக் காரனும் *

ஆயிரமு கத்துநதி பாலனும கத்தடிமை யானவர்தொ டுத்த
கவி, மாலைக் காரனும் *

ஆறுமுக வித்தகனு மாறிருபு யத்தரசு மாதிமுடி வற்றதிரு,
நாமக் காரனும் (௨)

யானெனதெனச்சருவு மீனசமயத்தெவரும் யாருமுணர்
தற்கரிய, நேர்மைக் காரனும் *

யாதுநிலை யற்றலையு மேழுபிறவிக்கடலை யேறவிடு நற்க
ருணை, யோடக் காரனும் *

ஏரகமிடைக்கழிசி ராமலைதி ருப்பழனி யேரணிசெ ருத்
தணியில், வாசக் காரனும் *

ஏழையினி ரட்டைவினை யாயதொரு டற்சிறையி ராமல்
விடு வித்தருணி, யாயக் காரனும் *

யாமளைம ணக்குழுக சாமளைம ணிக்குயிலை யாயென வழை
த்துருகு, நேயக் காரனும் *

ஏதமற நிச்சயம ஞேலயவி ளக்கொளியும் யாகமுனி வர்க்
குரிய, காவற் காரனும் *

ஈரிரும ருப்புடைய சோனைமத வெற்பிவரும் யானையள
விற்றுவளு, மாசைக் காரனும் *

எடவிழ்க டப்பமலர் கூதளமு டிக்குமிளை யோனுமறி விற்
பெரிய, மேன்மைக் காரனும் (௰)

வானவர்பொ ருட்டுமக வானதுபொ ருட்டுமலர் வாவியிலு
தித்தமுக, மாயக் காரனும் *

வாரணப திக்குதவு நாரணனு வக்குமரு மானுமய னைக்க
றுவு, கோபக் காரனும் *

வாழியென நித்தமற வாதுபர விற்சரண வாரிசம ளிக்கு
முப, காரக் காரனும் *

மாடமதில் சுற்றியத்ரி கூடகிரி யிற்கதிர்செய் மாநகரி யிற்
கடவு, ளாயக் காரனும் *

வாளெயிற துற்றபகு வாய்தொறுநெ ருப்புமிழும் வாசு
கியெடுத்துதறும், வாசிக் காரனும் *

வாளகிரி யைத்தனது தாளிலிடி யப்பொருது வாகைபுனை
குக்குடப, தாகைக் காரனும் *

மாசிலுயி ருக்குயிரு மாசிலுணர் வுக்குணர்வும் வானிலனு
வுக்கணுவு, பாயக் காரனும் *

வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படமகாடவியி
னிற்பதொர்ச, காயக் காரனும் (ரு)

மீனவனு மிக்கபுல வோருமுறை பொற்பலகை மீதமர்த
மிழ்த்ரயவி, ஞேதக் காரனும் *

வேரிமது மத்தமதி தாதகிக டுக்கைபுனை வேணியர்து திப்ப
தொரு, கேள்விக் காரனும் *

வேலைதுகள் பட்டுமலை சூரனுடல் பட்டுருவ வேலையுற
விட்டதனி, வேலைக் காரனும் *

மீனுலவு கிர்த்திகைகு மாரனுகி னைக்குமவர் வீடுபெற வைத்
தருளு, தாரக் காரனும் *

மேனையரி வைக்குரிய பேரனும தித்ததிறல் வீரனும ரக்கர்
குல, சூறைக் காரனும் *

வேதியர்வெ றுக்கையும நாதிபர வஸ்துவும்வி சாகனும்வி
கற்பவெகு, ரூபக் காரனும் *

வேடுவர்பு னத்திலுரு மாறிமுனி சொற்படிவி யாகுலம
னத்தினொடு, போம்விற் காரனும் *

மேவியபு னத்திதணி லோவியமெ னத்திகழு மேதகுகு றத்
திதிரு, வேளைக் காரனே. (சு)

திருவேளைக்காரன்வகுப்பு முற்றிற்று.

ஐந்தாவது

## பெருத்தவசனவகுப்பு.

தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதன *

அருக்க னுலவிய சகத்ர யமுமிசை, யதிற்கொள் சுவை யென வனைத்து நிறைவதும் *

அவஸ்தை பலவையு மடக்கி யகிலமு, மவிழ்ச்சி பெறவினி திருக்கு மவுனமும் *

அசட்டு வெறுவழி வழக்க ரறுவரு, மரற்று வனபொருள் விகற்ப மொழிவதும் *

அழுக்கு மலவிருண் முழுக்கி னுழல்வதை, யடக்கி யவநெறி கடக்க விடுவதும் (எ)

எருக்கு மிதழியு முடிக்கு மிறைகுரு, வெமக்கு மிறையவ னெனத்தி கழுவதும் *

இரட்டை வினைகொடு திரட்டு மலவுட லிணக்க மறவொரு, கணக்கை யருள்வதும் *

இருக்கு முதலிய சமஸ்த கலைகளு மிதற்கி தெதிரென, வினைக்க வரியதும் *

இறக்க வெனதெதிர் நடக்கும் யமபடர் கடக்க விடுவதொ, ரியற்கை யருள்வதும் (அ)

நெருக்கு வனவுப நிடத்தி னிறுதிக ணிரப்பு கடையினி, லிருப்பை யுடையதும் *

நெருப்பு நிலம்வெளி மருத்து வனமென, நிரைத்த நெறிமுறை கரக்கு முருவமும் *

நினைப்பு நினைவது நினைப்ப வனுமறு, நிலத்தி னிலைபெற நிறுத்த வுரியதும் *

நிலைத்த வடியவர் மலைத்த லதுகெட, நிவிர்த்தி யுறவனு பவிக்கு நியமும் (௫)

உருக்கு திருவரு டிளைத்து மகிழ்தர, வுளத்தொ டுரைசெய வொளித்து விடுவதும் *

ஒளிக்கு மொளியென வெளிக்கும் வெளியென, வுயிர்க்கு முயிரென நிகழ்ச்சி தருவதும் *

உரத்த தனிமயி லுகைத்து நிசிசர, ரொளிக்க வமர்பொரு சமர்த்த னணிதழை *

உடுத்த குறமகண் மணக்கு மறுமுக, னொருத்த னருளிய பெருத்த வசனமே. (௬)

பெருத்தவசனவகுப்பு முற்றிற்று.

---

ஆறுவது

## பூதவேதாளவகுப்பு.

தனன தனதன தனன தனதன, தனன தனதன தனன தனதன *

தனத ஞதன தந்தன தந்தன, தனத ஞதன தந்தன தநதன *

தத்ததன தானதன தத்ததா னத்தனன, தத்ததன தானதன தத்ததா னத்தனன *

தந்தத் தந்தனத் தான தாந்தன, தந்தத் தந்தனத் தான தாந்தன *

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
[illegible]

தத்தன தத்தன தத்தன தத்தன, தத்தன தத்தன தத்தன தத்தன *

தானதன தந்ததன தானதன தந்ததன, தானதன தந்ததன தானதன தந்ததன *

தனதன தனந்தனந் தந்தான தத்ததன, தனதன தனந்தனந் தந்தான தத்ததன *

தனதனன தானதன தத்தனன தத்ததன, தனதனன தானதன தத்தனன தத்தனன *

தனதன தத்த தனத்தன தத்த தானன, தனதன தத்த தனத்தன தத்த தானன *

தானனாதான தனாதன தந்தன, தானனாதான தனாதன தந்தன *

அருண கணபண புயக சுடிகையி, னகில புவனமு முதவு மலைமகள் *

அமலை யாரியை யந்தரி சுந்தரி, யிமைய மாமயி லம்பைத்ரி யம்பகி *

அச்சுதச கோதரிய னைத்துவே தத்தலைவி, யற்புதபு ராதனிவ ரப்ரகா சப்ரக்ருதி *

அம்பொற் குண்டலப் பேதை சாம்பவி, விம்பக் கிஞ்சுகப் பூவை பூங்கொடி *

அக்ஷர லக்ஷண பத்தர்க்ர மத்திடு, சக்ரத லத்தித்ரி யக்ஷி சடக்ஷரி *

ஆயிதிரு மைந்தன்முக மாயிரம்வி ளங்கியதொ, ராறுதர வந்தருளு மாறுமுக புண்டரிகன் *

அருவரை திறந்துவன் சங்க்ராம கற்கிமுகி, யபயமிட வஞ்சலென் றங்கீர னுக்குதவி *

அரசறிய வாமனமு னிக்கொருத மிழ்த்ரயமு, மபரிமித மாகவிவ ரித்தகட வுட்புலவன் *

அனுபவ சித்த பவக்கட லிற்பு காதெனை, வினவியெ டுத் தருள் வைத்தக ழற்கிர் பாகரன் *

ஆசிலா சார தபோதன ரின்புறும், வாசகா தீத மனோலய பஞ்சரன் *

அகரு ம்ருகமத களப பரிமள, விகட முகபட கடின புளகித *

அமிர்த பூதரி யண்டர்செ ழுங்கொடி, குமுத வாய்மயில் குஞ்சரி மஞ்சரி *

அக்கமொரு கோடிபெறு வஜ்ரபா ணிக்குமரி, தக்கவம ராவதிபு ரக்குமா னைக்கிறைவன் *

ஐம்பத் தொன்றிலெட் டாறின் மூன்றினி, லைந்திற் றங்கு மப் பாலை வான்பொருள் *

அப்படி பத்திப முத்தம னத்தின, ரர்ச்சனை மெச்சிய செச் சைமணிப்புயன் *

ஆறுநிலை யென்றுமுத லாகியப ரங்கிரியு, மாவினனை டுங் குடியு மாரணமு டிந்திடமும் *

அருணையு மிலஞ்சியுஞ் செந்தூர்தி ருப்பழனி, யடியர்மன பங்கயஞ் செங்கோடி டைக்கழியும் *

அனவரத நீலமலர் முத்தெரிசு னைப்புனலி, லருவிகுதி பாய்தருசெ ருத்தணியென் வெற்புமெனும் *

அலகிறி ருப்பதி யிற்பயில் கற்ப காடவி, யனுபவ னத்தனி ருத்தன ரத்த வாடையன் *

ஆறுமா மாதர் பயோதர பந்தியி, லாரவே பால முதாருமெ ந்தகை (௨)

வருண சரவண மடுவில் வருமொரு, மதலை மறைகமழ் குதலை மொழியினன் *

மதுக ராரவ மந்திர சிந்துர, மணம ருதக டம்புபு னைந் தவன் *

மட்டொழுகு சாரமது ரித்ததே னைப்பருக, மர்க்கடச மூக மமை தொட்டிரு லெட்டுவரை *

மன்றற் பைம்புனத் தாள்ப தாம்புயம், வந்திக் குந்தணிக் காம வாஞ்சையன் *

மத்தமு டித்தரு ளத்தர்ப்ரி யப்பட, நித்தம றைப்பொரு ளைத்தெளி வித்தவன் *

மாதிரமு மந்தரமு நீருநில னுங்கனக, மால்வரையு டன் சுழல வாசுகிவி டம்பொழிய *

மகரச விலங்கடைந் திந்த்ராதி யர்க்கமுது, பகிர்தரு முகுந் தன்மன் பஞ்சாயு தக்கடவுள் *

மருகன்மற வாதவர்நி னைப்பவைமு டிக்குமவ, னுருகுமடி யாரிருவி னைத்தொகைய றுக்குமவன் *

மறவர்பொ ருப்பி லொருத்திபொ ருட்டகாளிள, வடிவமு ழுக்க நரைத்தவி ருத்த வேதியன் *

மாதரா ரூப ணிராகுல சிந்தைய, ஞதிகூ தாள மதாணிய லங்க்ருதன் *

வரத விதரண விரத வனுபவ, மவுன குருபர ணிபுண குணதரன் *

வனஜ ஜாதனை யன்றுமு னிந்தற, வலிய பாரவி லங்கிடு புங்கவன் *

மட்டிலிரு நாலுதிசை கட்டுரே மிக்கிரியு, முத்தரகு ஞதி குட தக்ஷிண திக்கிரியும் *

மங்கத் துங்கவிட் டேறு வாங்கிய, செங்கைப் பங்கயச்
சோதி காங்கெயன் *

மத்தம லத்ரய மித்தைத விர்த்தருள், சுத்தய வித்ரகி
வர்த்திய விப்பவன் *

வாரணமு கன்றனது தாதையைவ லஞ்சுழல, வாகைமயில்
கொண்டுலகு சூழ்கொடிவ ருங்குமரன் *

மயமுறு ப்ரபஞ்சமுஞ் சங்கேத சட்சமய, வழியும னமுங்
கடந் தெங்கேனு நிற்குமவன் *

மதுரமொழி யாலுலக னைத்தையுமு ணர்த்துமவன், வட
வனல நேர்கொடிய குக்குடமு யர்த்தருகன் *

மரகத பக்ஷ குலத்துர கத்தி வாகரர், வடிவையு ருக்கி
வடித்ததி ருக்கை வேல்கொடு *

வாரிகோ கோவென வாய்விட வந்தெதிர், சூரமா சேனை
யைமோதுக ளந்தனில் (௬)

உருவ மிருளெழ வெயிறு நிலவெழ, வுலகு வெருவர
வசைய வருவன *

உடைய நாயகி கண்டும கிழ்ந்திட, நடைவி னோதவி தம்புரி
பந்திய *

ஓக்கலைவி டாதழுத ரற்றுபா லர்க்குமிக, வுச்சிவெடி யாது
கிணை மெத்தவே தப்புவன *

உங்குக் கிங்குவிட் டாழி நான்கினு, மொன்றுக் கொன்றடி
பாய்தல் காண்பன *

யுத்தக ளத்தினில் ரத்நம ணிக்குவை, யொட்டமொ
டொற்றையி ரட்டைபி டிப்பன *

யோகினிக ளும்பெரிய சாகினிக ளும்புதிய, மோகினிக
ளும்பழைய டாகினிக ளும்புகழ *

உவணகி ரைகொண்டிடுஞ் செங்காவ ணத்திடையி, லுற வுகொ ளவந்துதம் பெண்காறை கட்டுவன *

உமிழ்குருதி யாறடைப டக்குறட டுக்கியதி, லுபவனமொ ரேழையுமு றித்தருகொ ழுக்குவன *

உடுபட லத்தை மறைத்தகு றைக்கு வாலுட, லுதிரச முத் திர முற்று நிலைப்ப டாதன *

ஓடைமால் வார ணயூகம டங்கலு, மோரொர்பேய் நீள்க டைவாயில டங்குவ *

உடலி னிசிசரர் மவுலி யொலியலு, முதடு மலைவன பதடி முலையின *

உததி யேழும டங்கவு றிஞ்சியு, முதர வாரமு னின்றுகொ ளுந்துவ *

உக்கிரவி ராவணனெ டுத்தமே ருக்கிரியு, மொற்றியிரு தோள்கொடுபெ றித்திடா தப்புவன *

ஒன்றித் திண்குரற் கூகை பாம்பொடு, வென்றிச் செந்த லைத் தாலி பூண்பன *

ஒக்கமி டற்றிலி றக்குகு றைத்தலை, விக்கிவெ ளுக்கவெ ளுக்கவி ழிப்பன *

யோகுபுரி யுங்குகையும் யோகபர ரும்பொருவ, வோடை மத தந்திவயி றூடினிது றங்குவன *

உசிதபி சிதங்கொணர்ந் திங்கேற விற்றுமென, மதமலையெ லும்புகொண் டங்காடி கட்டுவன *

உதிரநிண வாள்பெருக வொட்டுவன வெட்டுவன, வுட லினடு வூடுருவ முட்டுவன தட்டுவன *

ஒழுகுபி ணத்துநி ணத்தின ளற்றி லேபடு, வொடியவு ழக்கிவ ழுக்கி யுருட்டி வீழ்வன *

ஊசலார் வார்கு ழையோலையி டும்படி, யோதுசா மீக ரமேமிபி டுங்குவ (௫)

கரண மிடுவன குணலை யிடுவன, கழையை நடுவன பவுரி வருவன *

ககன கூடமு டைந்துவி ழும்படி, கதறி வாயனல் கன்க னல் சிந்துவ *

கைச்சதியி ஞமுறைவி தித்தவா முற்கடித, சச்சபுட சாச புட சட்பிதா புத்திரிக *

கண்டச் சம்பதிப் பேத மாம்பல, கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி *

கற்சரி யுற்சவ தர்ப்பண லக்ஷண, சச்சரி மட்டிகை யொற் றிய றுப்பன *

காயெரிய பங்கியொடு சேகரமி குந்தசைவ, காதுபடு சங்க வளை மாலிகைபு னைந்திசைவ *

கருணைய திகந்துவந் தொண்கோகு லப்பெரிய, கருமு டியொ டும்படுங் கங்காள மோதுவன *

கடிபயிர வாதிகள்ப்ரி யப்படுக திக்கிசைய, நடைநவிலு பாவனை யுதிக்குநட வித்தையின *

கடக மடுத்த விடக்கைவ லக்கை வாளின, கருதிய லக்ஷிய லக்ஷண முற்று மோதுவ *

காலமா ருத வராளிசி கண்டிகை, பாலசீ காம ரமாணவி பஞ்சிகை *

கவுட பயிரவி லளிதை கயிசிகை, கவுளி மலகரி பவுளி யிசைவன *

கனவ ராடிய ரும்பட மஞ்சரி, தனத ஞசிவி தம்படு பஞ்சமி *

கைச்சுலவு கோன்முறைவி ழித்தரா கத்தடைவி, லுச்சமது
சாதிகமெ டுத்துமே லெட்டுவன *

கஞ்சக் கஞ்சநற் றேசி ராஞ்சிகு, நிஞ்சிப் பண்குறித்
தியாழை யேந்துவ *

கற்றவு டுக்கையி டக்கைக ளப்பறை, மத்தளி கொட்டிய
முற்றும டிப்பன *

காரெனமு ழங்குகுர லேறுதுடி சந்த்ரவளை, வீரமுர சுந்தி
மிற டாரிகுட பஞ்சமுகி *

கரடிப றையங்கனந் தங்கோடி கொட்டுவன, முறைமுறை
கவந்தநின் ருென்றொடு கிட்டுவன *

கசரதப தாதிணிய ரக்கர்துணி பட்டுவிழு, களமுழுதும்
வாழியதி ருப்புகழ்மு ழக்குவன *

கடியகு ணத்த சினத்தச கத்ர யோசனை, நெடியக மூத்த
சுழித்தவி ழித்த பார்வைய *

காதநூ ருயி ரகோடிவ ளர்ந்தன, பூதவே தாள மநேகவி
தங்களே. (க)

பூதவேதாளவகுப்பு முற்றிற்று.

---

ஏழாவது

# பொருகளத்தலகைவகுப்பு.

தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதன தனத்த
தனதன *

அதிர்த்த பரிபுர பதத்தி பயிரவி யமைத்த கரதலி ப்ரிய
த்தை யுடையன *

அடித்த தமருக கரத்தர் பயிரவர் நடித்த நவரச நடத்தை யறிவன *

அருக்கர் பதமல வுடுக்கள் பதமள வடுக்கு பிணமொரு குறட்டி லடைசுவ *

அளக்க ருடைபட மிகுத்த குருதியை யடைத்து மடைபட வுடைத்து விடுவன *

அரக்கர் முடிகளை யடுப்பு வகிர்வண வவற்றி னுலையென விரத்தம் விடுவன *

அடுக்க லெனுமவ ரெயிற்றை யவர்கர வகப்பை யவை கொடு புகட்டி யடுவன *

அமிழ்த்தி யடிவிழு பிணத்தி னிணவெளி றளற்றி னிடையடி வழுக்கி விழுவன *

அடப்பை யிடவரு மனுக்க ருடன்வரு தடக்கை மதமலை நடத்தி வருவன (வ)

குதித்து மகிழ்வொடு மிதித்து நடமிடு குறட்கு மிகுதசை கொடுத்து வருவன *

கொழுத்த குரகத விறைச்சி வகைவகை குவித்து முறை முறை யவித்து நுகர்வன *

குருத்து மலரினும் வெளுத்த நிணமது கொளுத்தி யனலதில் வெதுப்பி யிடுவன *

குதட்டி நெடியன வுதட்டி விடுதசை கொடிக்கு முதுசின நரிக்கு முமிழ்வன *

குணக்கு வளைகடல் வடக்கி யம்திசை குடக்கு முழுவது மடக்கு வயிறின *

குரக்கு மிடறின கரத்தி லெழுகிரி குலுக்கி யடியொடு பறித்து நிமிர்வன *

குதித்து முழுகியு மிரத்த நதியிடை குடித்து முணர்வொடு
களித்து வருவன *

குறத்தி யிறைவனை நிறைத்து மலரடி குறித்து வழிபடு
குணத்தை யுடையன (௭)

துதிக்கை மலைகளை யடுக்கி யலகைக ளுதிக்க வவைமிசை
யிருக்கு மரசின *

துளக்க முறுசுடர் விளக்கை யனையன சுழித்து வெருவர
விழித்த விழியின *

துதித்து வழிபட நடத்தல் குறையன சுகித்து வெளிபட
நகைத்து வருவன *

துணித்த கரியுட றிணித்த மிடறிடை துவக்கி யவசமொ
டுவிக்கி நிமிர்வன *

தொலைத்த முடிநிரை பரப்பி வயிரவர் சுழற்றி நடமிடு
துருத்தி யிடுவன *

துணுக்க முளவவர் துணுக்க மிலையென வெடுத்த கழிநெ
டில் படித்து வருவன *

சுரர்க்கு மகபதி தனக்கு மினியொரு துளக்க மிலையென
மகிழ்ச்சி புகல்வன *

தொகுக்கு தொகுதொகு தொகுக்கு தொகுதொகு தொகு
க்கு தொகுவென நடித்து வருவன (ஞ)

எதிர்த்து மலைவன முடித்து வெளிமுக டிடித்து விழுமிடி
யிடித்த குரலின *

இரட்டை யிளமதி யுதித்த வெனவெளி றெயிற்றி னில
வெழு மிருட்டு வடிவின *

இயக்க முறுபல ரதத்தி னுருளைக ளிருத்தி யணிதரு பெரு
த்த குழையின *

இடக்கை குடமுழ வுடுக்கை துடிபறை யெடுத்து முகி
லென முழக்கி வருவன *

இதத்த கயிசிக மினித்த பயிரவி யெழுப்பி யெழுவகை
நிருத்த மிடுவன *

இறப்பும் வருமெழு பிறப்பு மறவினி திருத்து மெனமயில்
விருத்த மொழிவன *

இடைக்க ழியிலொரு செருத்த ணியிலினி திருக்கு மறு
முக னொருத்த னிளையவன் *

இளைத்து நிசிசரர் பதைத்து மடியவொ ரிமைப்பி லமர்
பொரு களத்தி னலகையே. (க)

பொருகளத்தலகைவகுப்பு முற்றிற்று.

---

## எட்டாவது
## செருக்களத்தலகைவகுப்பு.

தனனத் தனனத் தனனத் தனனத் தனனத் தனனத்
தனத்த தனதன *

குதிரைத் திரள்பட் டபிணத் தையெடுத் துதிரப் புனலிற்
குளிக்கு மொருதிரள் *

குருதிக் கடலைப் பெருகப் பருகிக் குணலைத் திறனிற் களி
க்கு மொருதிரள் *

கொடுகொட் டிபடத் துடிகொட் டிநடத் தடமிட் டுவளைத்
திருக்கு மொருதிரள் *

குடரைப் புயமிட் டெடலைச் சிறுகக் குலையிட் டதிரச் சிரிக்கு
மொருதிரள் (வ)

சதையைச் சிலகைக் கொளம்ற் றதனைச் சருவிச் சருவிப்
பறிக்கு மொருதிரள் *

தறுகட் சிறுகட் டவளக் கவளத் தமரத் திமிரப் பனை
க்கை மதமலை *

தலையுக் குளாநற் றருணக் கிரணத் தரளத் திரளைக் குவித்த
டியெனுரல் *

தணிவிட் டதனைத் தருகைத் தலமுற் றிடுநெட் டைமருப்
புலக்கை முறைமுறை (௭)

எதிரிட் டதுகுத் திமுடித் தலையொப் பவடுப் பெனவைத்
தெனுப்பு விறகினை *

எரியிட் டெரியிட் டுருவத் துடனெட் டுலைவைத் துண
வைச் சமைக்கு மொருதிரள் *

இருள்செற் றதடித் தினையொத் திடுகட் கமெடுத் தெறியத்
தெறித்த தலைகளை *

இதெனக் கதனைக் கதுமற் றதனுக் கெனமொய்த் தலவிப்
பொறுக்கு மொருதிரள் (௮)

அதரத் துவிரற் படவைத் துயிருத் தரவத் தொடுகொக்
கரிக்கு மொருதிரள் *

அமுதொத் தநிணத் தசைமுக் கியறத் தவசத் துயிலிற்
கிடக்கு மொருதிரள் *

அடவிப் புனமுற் றகுறத் திருவுக் கமைவுற் றமணிப்
புயத்த னறுமுகன் *

அடன்மிக் கதயித் தியர்பட் டுவிழப் பொருதிட் டசெருக்
களத்தி லலகையே. (௯)

செருக்களத்தலைகைவகுப்பு முற்றிற்று.

ஒன்பதாவது

## போர்க்களத்தலகைவகுப்பு.

தனதன தந்தன தனதன தந்தன தத்தா தனத்தன, தன
தன தனந்த தானத் தனத்த தனதன *

பகலிர வின்றியொர் புகறிசை கந்திய, பற்பா ஜுத்தகை
படமுதல் விசும்புதூர்த் தடுக்கு பிணமலே *

பவுரிவ ரும்பரி புரகரல் பங்கய, வித்தா ரத்தன பயிரவி
பதங்கள்வாழ்த் தெடுத்த பசியன *

பரியகொ ழூந்தசை பயிரவ ரென்றுப, லிக்கா நிற்பவர்
பகரிட மறிந்துபாத் திரத்தி லிடுவன *

பரவிவ ருங்குறள் பசிதணி யும்படி, பட்டார் கைப்படு பரி
சையின் முகந்துசூட் டிறைச்சி சொரிவன *

படுகள மென்படதொர் செறுவில் விளைந்தன, பற்கோவைப்
பயில் பவுரிவி சைகொண்டுநீட் டிமெத்த வடுவன *

பரியணி திண்பணை முடியம டிந்துடல், பப்பா இத்துணி
படவிழு பெருங்கைமாக் கருக்கல் பகிர்வன *

படைவிச யந்தெரி சலதிவ லம்புரி, பற்றுர் பட்டுள பலபல
விதங்களார்ப் பெடுக்கு முதடின *

பகடுபி ளந்தத ஊரிவைபு னைந்திடு, குப்பா யத்தன பதவிய
ரிணைஞ்செயூட் டுடுத்த வுடையின (ω)

உகமுடி வன்றினும் வெருவவ ரும்பல, வுற்பா தத்தன
வொளிமதி வகிர்ந்தநீற் றெயிற்று நிலவின *

உருவமி ருண்டன கிகிரிவி லங்கலி, ஹுட்பாய் கிற்பன
வுலவிநி ணமொண்டுகூட் டமைத்து நுகர்வன *

உததியு றுஞ்சுவ வடைவெநெ டுங்கன, லுட்கா கப்பெரு
குதிரயி ரதங்கள்பேர்த் திறக்கி யிடுவன *

உருமுமி டைந்தென வதிர்குர லின்றமி, லொப்பே றிட்டுகி
ருதர்மவு லிகொண்டுகோட் டையிட்டு மலைவன *

உலகுகு லுங்கிட வரியது ணங்கையி, னைச்சா திப்பன
வுவணப டலங்கள்காக் கைசுற்றி வருவன *

உலைதரு மென்குட ரிடைபட விந்திர, னுத்தியா னத்தல
ருகிர்கொடு புனைந்தகுட் டுமுற்றி மலைவன *

உயரிய முங்குர கதகுல முங்கண, பொற்றேர் வர்க்கமு
முடைபடு கலங்கள்போற் சுழித்து விரைபட *

ஒழுகுதி ரந்தனின் முழுகியெ ழுந்தன, வுச்சா டத்துட
னுடைகட லதிர்ந்துகூப் பிளக்கு நடையின (௧)

செகதல மெங்கணு மதிரமு ழுங்கிய, டிப்பாய் வெற்றிய
திரள்வரை பிடுங்கிநாட் டியொட்டு குழையின *

சினமலி வெங்குற ளினமொடு திண்டிறன், மற்போர் கற்
பன திசையள வுநின் றுநீட் டிவைக்கு மடியின *

திசைகடொ றும்பல குறைகளெ ழுந்துது, டித்தா டச்
சிறை செறிகழு கரங்கில்வீற் றிருக்கு மாசின *

திமிரயி லங்கிழி படவிசை கொண்டுகு, தித்தா லிப்பன
சிகரவ டகுன்றினூற் றிரட்டி நெடியன *

சிறியன கிங்கிணி யணிகுரு வின்சர, ணத்யா னத்தின
வகண்டசீர்த் திமெச்சி யிரைவன *

திமிலைபெ ரும்பறை சிறுபறை நின்றதி, ரச்சே விக்குயர்
சயமகள் விளங்குவேற் கரத்தை மொழிவன *

திரிகட தொங்கிட திரிகட திங்கிட, தித்தீ செக்கண செக
கண மொழிந்துகூத் தனைத்து நவில்வன *

சிலைமலி திண்புய வசுரர்சி ரங்கள, டுப்பா வைத்தவர் செறி
குடர் நிணங்கள்காய்ச் சிமிக்க வயில்வன (௯)

நிகரில நம்புரி குருகுல பஞ்சவர், மெய்த்தூ துக்கொரு
நிமிடம திலன்றுபோய்க் கவித்த மணிமுடி *

நிருபர்ப யங்கொள நெறுநெறெ னும் டி, பொற்பீ டத்
திடை நிலைபெற விருந்துநூற் றுவர்க்கு மவரநி *

நினைவுற வன்புறு மொருபதி னெண்குண, வக்கோ ணிப்
படை நிகிலமு மடிந்துகூற் றுவற்கு நிறைவுற *

நிலமகள் வன்பொறை கடியுமு குந்தன்மு, தற்சேண் முட்
டவு நெறிபட நிமிர்ந்தவாக் கையற்கு மருமகன் *

நிமலைத்ரி யம்பகி கவுரிதி கம்பரி, நிர்ப்பா வக்குண நிபுணி
யிரங்குதாய்ப் ப்ரியத்த னறுமுகன் *

நிகரக னங்குல சிகரிதொ டும்பெரு, வெற்பா ருற்பல நிறை
யரு விகொஞ்சவோச் சியத்தி லொளிர்சுனை *

நியதியி னன்கலர் தணிகையெ னும்பதி, நிற்பான் முற்பட
நெடுமக ரசிந்துதீப் பறக்க வெகுவித *

நிபுடது ரங்கக சவிரத சங்க்ரம, நிட்டூ ரக்கொலை நிருதரை
முனிந்தபோர்க் களத்தி லலகையே. (௧)

போர்க்களத்தலகைவகுப்பு முற்றிற்று.

---

பத்தாவது

## திருஞானவேழவகுப்பு.

தனன தத்தன தனன தத்தன தனன தத்தன தான தானன.

சடைல பட்டலை யுடலெ னப்படு தரும சித்திர கூட
மானவை *

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை 20

தவிர நிட்கள வெளியி னிற்பன சமய தர்க்கவி ரோத வாதிகள் *

தகர வெற்றுவ புகர்ம தக்கிரி தனையு ருக்குவ வாசை யானவ *

தனையி யற்கையை விடந டிப்பன சனன முற்றிய சாத மாமெழு (௭)

கடல்க டப்பன படுகொ லைச்சமர் கடக மப்படி சாய மோதுவ *

கருவி னைத்தரு மிருவி னைத்தொடர் கழல்ப தத்தன யோக சாதகர் *

களைப றிப்பன கிளையெ னப்படு கவலை சுற்றிய காடு சாடுவ *

கருணை மெய்த்தவ திருவ ருட்கன கவளமொக்குவ காம ராசனை (௮)

அடல்கெ டுப்பன வகில கற்பனை யரண ழிப்பன கோப மானவை *

அவிய நற்பொறை யெனுந திப்பிர ளயமி றைப்பன லோப மோகிதம் *

அவைமு றிப்பன மதமு ழுத்தறி யடிப றிப்பன ராச தாதியின் *

அதிகு ணத்ரய மதிலி டிப்பன வளவி றத்துவ தூளி வீசுவ (௯)

திடமு டைச்சிறை மயிலு கைத்தெழு சிகரி குத்திய வேலை நீள்சுனை *

தினமு முற்பல மலர்தி ருத்தணி யிறைதி ருப்புகழ் பாடு நாவலர் *

திரள்ப்ரி யப்பட வினித ளிப்பன செயலொ ழித்தநு பூதி மீயிசை *

திகழு மற்புத மவுன நிர்க்குண சிவம யத்திரு ஞான வேழமே. (க)

திருஞானவேழவகுப்பு முற்றிற்று.

---

## பதினொராவது
## திருக்கையில்வழக்கவகுப்பு.

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன, தனத்தன தனத்தன தனத்தன தனத்தன. *

திருக்குவ செருக்களம் வெருக்கொள வதிர்ப்பன, தட்க்கர நிமிர்த்துய ருடுக்குல முதிர்ப்பன *

தடித்தெழு குலப்புலி நடுக்குற வதிர்ப்பன, தழைச்செவி படைப்பன திரட்கயி லையொப்பன *

சதுர்த்தச தலத்தையு மெடுத்தக டவுட்பணி, சகச்ரப ணபத்தியு மொடுக்குற நடப்பன *

சமுத்ரம தனத்தில முதத்துட னுதிப்பன, தரத்தன தலைச்சுர நதிப்புனல் குளிப்பன (வ)

அருக்கர்ப தமுட்பட மிதித்திடு பதத்தன, வறப்படு கொலைத்தொழில் புறப்படு முகத்தன *

அரக்கர்ப டைகெட்டுமு றியப்பொரு பதத்தன, வயற்குமமர்க்குமொ ருபொற்பதி யளிப்பன *

அளித்தவ முதுக்கவ ளமொக்குவ னமுத்தெறி, யலைக்கடல் கலக்குவ குலக்கிரி குலுக்குவ *

அடித்தெழு பொருப்பிணை நெருப்பெழ விழிப்பன, வதிக்ரம கமப்ரவு டவிக்ரம மதத்தன (௬)

மருக்குல வுகற்பக வனத்தலர் பறிப்பன, வளைத்தெழு தருக்களை மொளுக்கென முறிப்பன *

மதிப்பிள வெனச்செரு கிலைத்தென மணிச்சதுர், மருப்பின விமைப்பற விழித்தநயனத்தன *

வளைத்தகி ரியைப்பொடி படுத்தியி பமெட்டையு, மலைத்தவணடிப்பட மடப்பிடி யணைப்பன *

மழைப்புயல் கிழிப்பன புனற்பசி தணிப்பன, மணிக்கணகனப்பண மதத்ரயம் விதிர்ப்பன (ஐ)

திருத்திய புனத்திடை வனத்தழை யுடுத்தினி, திருப்பவள் விருப்புறு வரைப்புயன் வினைப்பகை *

செகுப்பவ னினைத்தவை முடித்தருள் க்ருபைக்கடல், சிவத்தக மலச்சர வணத்தறு முகப்பொருள் *

செகத்ரய முகிழ்த்தவு தரத்திரி புரைக்கொரு, திருப்புதல் வனுற்பல கிரிப்பெயர் தரித்தருள் *

திருத்தணி மலைக்கிறை திருப்புகழ் படிப்பவர், சிறப்பொடு பெறத்தரு திருக்கையில் வழக்கமே. (க)

திருக்கையில்வழக்கவகுப்பு முற்றிற்று.

---

பன்னிரண்டாவது

## வேடிச்சிகாவலன்வகுப்பு.

தனதனன தத்தனன தனதனன தத்தனன, தனதனன தத்தனன தானத் தனதனன *

உதரகம லத்தினிடை முதியபுவ னத்ரயமு, முகமுடிவில் வைக்குமுமை யாள்பெற் றபாலகனும் *

உமிழ்திரைப ரப்பிவரு வெகுமுககு லப்பழைய, வுதகமகள் பக்கல்வரு சோதிச் சடானனனும் *

உவகையொடு கிர்த்திகைய ரறுவருமெ டுக்கவவ, ரொருவ
ரொரு வர்க்கவொ ரோர்புத்திர ஞனவனும் *

உதயரவி வர்க்கநிகர் வனகிரண விர்த்தவித, மூடையசத
பத்ரநவ பீடத் துவாழ்பவனும் *

உறைசரவ ணக்கடவுண் மடுவிலடர் வஜ்ரதர, னுடையமத
வெற்புலைய வேதித் தவீரியனும் *

உரைபெறவ குத்தருணை நகரினொருப த்தனிடு, மொளிவ
ளர்தி ருப்புகழ்ம தாணிக்ரு பாகரனும் *

உரககண சித்தகண கருடகண யக்ஷகண.முபநிட்மு ரைத்
தபடி பூசிக்கும் வானவனும் *

ஒருவனும கிழ்ச்சிதரு குருபரனு மூத்தமனு, மூபயமுறு
மக்நிகர மீதிற்ப்ர பாகரனும் (வ)

அதிமதுர சித்ரகவி நிருபனும கத்தியனு, மடிதொழுத
மிழ்த்ரயவி னோதக் கலாதரனும் *

அவரைபொரி யெட்பயறு துவரையவல் சர்க்கரையொ,
டமுதுசெயும் விக்நபதி யானைச் சகோதரனும் *

அவுணர்படை கெட்டுமுது மகரசல வட்டமுட,னபயமிட
விற்படைகொ டாயத் தமானவனும் *

அருணையிலி டைக்கழியி லுரககிரி யிற்புவியி, லழகியசெ
ருத்தணியில் வாழ்கற் பகாடவியில் *

அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளு, மறியெனவி
மைப்பொழுதின் வாழ்வித் தவேதியனும் *

அரிபிரம ருக்குமுத லரியபர மற்குயரு, மருமறைமு டிப்
பையுப தேசித் ததேசிகனும் *

அமலனுமெ ணக்கரசு மநிகுணனு நிர்க்குணனு, மகிலபுவ
னத்தமர சேனைக் குநாயகனும் *

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அனுபவனு மற்புதனு மனுகுணனு மக்ஷரனு, மருமனமொ
ழிக்குமனு பூதிச் சுகோதயனும் (௫)

இதமகிதம் விட்டுருகி யிரவுபக லற்றவிட, மௌனதறவீ
ருக்கைபுரி யோகப் புராதனனும் *

எனதுமன சிற்பரம சுகமவுன கட்கமதை, யமன்முடிது
ணிக்கவிதி யாவைத் தபூபதியும் *

எழுமையுமெ னைத்தனது கழல்பரவு பத்தனென, வினிது
கவி யப்படிப்ர சாதித் தபாவலனும் *

இமையவர்மு டித்தொகையும் வனசரர்பொ ருப்புமென,
திதயமும ணக்குமிரு பாதச் சரோருகனும் *

எழுதரிய கற்பதரு நிழலில்வளர் தத்தைதழு, வியகடக
வஜ்ரவதி பாரப் புயாசலனும் *

எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவள, ரிவுளிமுகி
யைப்பொருத ராவுத் தனுனவனும் *

எழுபரிர தத்திரவி யெழுநிலமொ டக்கரிக, ளிடர்படமு
ழக்கியெழு சேவற் பதாகையனும் *

இணையிலியு நிர்ப்பயனு மலமிலியு நிஷ்களனு, மிளையவ
னும் விப்ரகுல யாகச் சபாபதியும் (௬)

மதுகையொடு சக்ரகிரி முதுகுநெளி யப்புவியை, வளையவ
ரும் விக்ரமக லாபச் சிகாவலனும் *

வலியகிக ளத்திநெடு மறுகுசிறை பட்டொழிய, வனச
முனி யைச்சிறிது கோபித் தகாவலனும் *

வருசுரர்ம திக்கவொரு குருகுபெயர் பெற்றகன, வடசிகரி
பட்டுருவ வேரெட் டசேவகனும் *

வரதனும நுக்ரகனு நிருதர்குல நிஷ்டுரனு, மனுபவன சித்த
னும னேதுக் கபேதனனும் *

வயிரிசைமு ழக்கமிகு மழைதவழ்கு றிச்சிதொறு, மகிழ்கு
ரவை யுட்டிரியும் வேடிக்கை வேடுவனும் *

மரகதம ணிப்பணியி னணிதழையு டுத்துலவும், வனச
ரர்கொ டிச்சிதனை யாசிக் கும்யாசகனும் *

மதனன்விடு புஷ்பசர படலமுட லத்தணையு, மடலெழுதி
நிற்குமதி மோகத் தபோதனனும் *

வரிசிலைம லைக்குறவர் பரவியபு னத்திதணின் மயிலெனவி
ருக்குமொரு வேடிச் சிகாவலனே. (௪)

வேடிச்சிகாவலன்வகுப்பு முற்றிற்று.

---

பதின்மூன்றாவது

## சேவகன்வகுப்பு.

தனதன தனன தனதன தனன தனதன தனனா தனத்
தா தனனா *

இருபிறை யெயிறு நிலவெழ வுடல மிருள்படு சுருப
முடைக்கோ விடவே *

இறுகிய கயிறு படவினை முடுகி யெமபடர் பிடரி பிடித்
தே கொடுபோய் (௧)

அருமறை முறையின் முறைமுறை கருதி யதரிடை
வெருவ வொறுத்தால் வகையால் *

அறிவொடு மதுர மொழியது குழறி யலமரு பொழுதி
லழைத்தால் வருவாய் (௨)

ஒருபது சிரமு மிருபது கரமும் விழவொரு பகழி தொடுத்
தோன் மருகா *

உரமது பெரிய திரிபுர மெரிய வுயர்கன கிரியை வளைத்
தோர் புதல்வா (௩)
மருவள ரடவி வனிதையர் பரவ மரகத விதணி லிருப்
பாள் கணவா *
வளைகடல் கதற நிசிசரர் மடிய மலையொடு பொருத முழுச்
சே வகனே. (௪)

சேவகன்வகுப்பு முற்றிற்று.

---

பதினைன்காவது

## வேல்வாங்குவகுப்பு.

தனதன தந்தன தனதன தந்தன தந்தன தானந்தன
தானந்தன *
திடவிய நெஞ்சுடை யடியாரி டும்பைகெ டும்படி தீயாங்
குறை போயாழ்ந்தது *
செயசெய வென்றிசை பரவிய வெங்கள்கொ டுங்கலி
தேசாந்தர மேசாய்ந்தது *
செயதுரை நஞ்சுறழ் மயலுறு நெஞ்சினர் வஞ்சகர் தீமான்
கதர் தாமேங்கினர் *
சிகரத ரங்கித மகரநெ ருங்குபெ ருங்கட லீமூண்டுதன்
வாய்மாண்டது *
தெரியலர் சென்றடை திசைகளி லெண்கரி சிம்பெழ மாமு
ங்கிரி நூறுந்துளை *
சிகரநெடுங்கிரி குகைகடி றந்துதி கந்தமும் லோகாந்தமு
நீர்தேங்கின *
சிறையுள மூந்திய குறைகளொ ழிந்துசெ யங்கொடு தேவே
ந்திரர் சேணாண்டனர் *

திரிபுவ னங்களு மொருபய மின்றிவ ளங்கெழு சீர்பூண்
டற நேர்பூண்டன (௭)

விடவச னஞ்சில பறையும்வி ரிஞ்சன்வி லங்கது கால்பூண்
டுதன் மேறீர்ந்தனன் *

விகசித சுந்தர விதரண வைந்தரு வெந்தெழில் வீவான்
பொழில் பூவாய்ந்தது *

விழைவுத ரும்பத சசிதன்வி ளங்கிய மங்கல நூல்வாங்குழி
லாள்வாழ்ந்தனள் *

வெருவியொ துங்கிமை யவரெவ ருஞ்சிறை வென்றிதமே
லாம்படி யேமீண்டனர் *

விழியொரி ரண்டொரு பதுசத நின்றெரி கண்டகன் மேல்
வாங்கினை கால்சாய்ந்தது *

வெளிமுழு துந்திசை முழுதும்வி ழுங்கியெ ழுங்கன சூர்
மாண்டற வேர்மாய்ந்தது *

விபுதர்ப யங்கெட நிருதர்த ளங்கெட விண்கெடு மேடாம்
படி பாடோங்கின *

மிடைகுறள் வெங்கொடி கழுகுப ருந்துவி ருந்தென ஞூ
ர்ந்தகல் வானூர்ந்தன (௮)

அடவிப டுஞ்சடை மவுலியில் வெம்பணி யம்பணி யாமாங்
கதர் வாமாங்கனை *

அனுபவை யம்பிகை யனுதினை யம்பைத்ரி யம்பகி யாசா
ம்பரை பாசாங்குசை *

அனகைய சஞ்சலை யதிகுண சுந்தரி யந்தரி காலாந்தகி
மேலாந்திரு *

அமலைய லங்கிர்தை யபிநய பங்குரை சங்கினி மானுங்கணி
ஞானங்குரை *

அணிமுக பந்திகள் சிறுபொறி சிந்தவி ளைந்தழல் வாய்கா
ன்றிடு நாகாங்கதை *

அபயவ ரம்புரி யுபயக ரந்திக ழுந்தணி யாமாங்கிறி தாய்
மாண்பினள் *

அதுலைத ருந்திரு மதலையி பங்கொள்ப யங்கொடு பாய்மா
ண்கலை வாய்மாண்புன *

அணிகுற மின்புணர் தணிகையி லந்தண னிந்திர ராசா
ங்கம தாராய்ந்தவன் (ஞ)

வடவையி டும்படி மணிமுடி பஞ்செழ விஞ்சிய மாடாம்
புடை நாடாண்டகை *

வசைகரு துங்குரு பதியொடு தம்பிய ரும்பட வேபாண்ட
வர் தேரூர்ந்தவன் *

வளவில்வ ளர்ந்திடை மகளிர்கு விந்துத டங்குடை வார்பூ
ந்துகில் வார்பூம்புயல் *

வரைநிரை கன்றின முழுதும யங்கிய பண்கெழு வேயே
ந்திய வாயான்கழல் *

மருதிடை சென்றுயர் சகடுத டிந்தடர் வெம்புனை வாய்கீ
ண்டொரு பேய்காய்ந்தவன் *

மதசயி லம்பொர வரவிடு நெஞ்சினில் வஞ்சக மாமான்
பகை கோமான்றிரு *

மருகனி ரம்பிய மதிமுக மஞ்சரி குஞ்சரி வாகாம்பரை
தோய்காங்கெயன் *

மகபதி தன்பதி பகைகிழி யும்படி யன்றடல் வாளோங்கிய
வேல்தாங்கவே. (க)

வேல்வாங்குவகுப்பு முற்றிற்று.

பதினைந்தாவது

# புயவகுப்பு.

தனதன தனன தனதன தனன தனதன தான தான,
தன தன தத்தன தந்த தந்த தந்த தானத் தனந்தன *

வசைதவிர் ககன சரசிவ கரண மகாவிர்த சீல சால வர
முனி சித்தரை யஞ்ச லஞ்ச லென்று வாழ்வித் துநின்றன *

மணிவட மழலை யுடைமணி தபனி யநாணழ காக நாடி
வகைவகை கட்டுமெ ருங்கு டன்பொ ருந்து ரீதிக் கிசைந்தன *

வருணித கிரண வருணித வெகுத ருணுதப சோதி யாடை
வடிவுபெ றப்புனை திண்செ ழுங்கு றங்கின் மேல்வைத்
தசைந்தன *

வளைகட லுலகை வலம்வரு பவுரி விநோதக லாப கோப
மயில்வத னத்துவி ளங்கு மங்கு சங்க டாவிச் சிறந்தன *

வரைபக திருதர் முடிபக மகர மகோததி தீயின் வாயின்
மறுகவி திர்த்தயில் வென்றி தங்கு துங்க வேலைப் புனைந்தன *

மதியென வுதய ரவியென வளைப டுதோல்வி சால நீல மலி
பரி சைப்படை கொண்டு நின்று மூன்று சாதிக் கமழ்ந்தின *

மனகுண சலன மலினமி றுரிய வதீதசு கானு பூதி மவுனநி
ரக்ஷரமந்தி ரம்பொ ருந்தி மார்பிற் றிகழ்ந்தன *

வகைவகை குழுமி மொகுமொகு மொமெனு வநேகசு
மூக ராக மதுபம்வி ழச்சிறு சண்ப கஞ்செ றிந்த தாரிற்
பொலிந்தன (வ)

மிசைமிசை கறுவி வெளிமுக டளவு நிசாசர சேனை தேடி
விதிபெ றச்சில கங்க ணங்க றங்க மீதிற் சுழன்றன *

வெருவுவ வெருவ வெரிசொரி விழியு ளபூதபி சாசு போத மிகுதொனி பற்றிமு ழங்கு விஞ்சு கண்டை வாசிக் கைகொண்டன *

விதமிகு பரத சுரவனி தையர்க ணமேமெருறும் லீலை யாக விமலச லத்தினை விண்டி றந்து மொண்டு வீசிப் பொலி ர்தன *

விதரண தருவின் மலரிடை செருகி யகூதள நீப மாலை வி புதர்கு லக்குலி சன்ப யந்த செங்கை யானைக் கிசைந்தன *

விகசித தமர பரிபுர மூளரி தொழாவபி ராம வேடர் விம லைதி னைப்புன மங்கை கொங்கை கண்டு வேளைப் புகுந்தன *

விதிர்தரு சமர முறிகர கமல நகாயுத கோழி வீற விதரண சித்ரவ லங்கிர் தம்பு னைந்து பூரித் திலங்கின *

விரகுடை யெனது மனதுட னகில்ப ணிநீர்புழு கோட ளாவி மிர்கமத கர்ப்புர குங்கு மங்க லந்து பூசித துதைந் தன *

வினைபுரி பவனி தொழுதழு துருகி யகோதையா தூது போக விடுமெது பக்ஷண வண்டி னந்தி ரண்டுகுழப் படிந்தன *

இசைதனி லினிய கயிசிகை கவுட வராளித ஞுசி தேசி பயிரவி குச்சரி பஞ்சு ரந்தெ ரிந்து வீணைக் கிசைந்தன *

இறுதியி லுதய ரவிகண நிகரெ னவாறிரு காது தோய்பு மில குமணிக்கன விம்ப குண்ட லங்கண் மேவிப் புரண்டன *

எதிர்படு நெடிய தருவடு பெரிய கடாமுமிழ் நாக மேக மிடிபட மற்பொரு திணைசி லம்ப டங்க மோதிப் பிடுங்கின *

எழுதரு மழகு நிறமலி திறலி சையாகவு தார [illegible] மென வுரை பெற்றவ டகக லுஞ்சி றந்து சாலத தழும்பின *

இருள்பொரு இரண விரணிய வடகு லபாரிய மேரு சாதி யி
னொடும் வொத்துல கங்க ளெங்கணும்ப்ர காசித்து நின்றன*

இயன் முனிபரவ வொருவிசை யருவ ரையூடதி பாரகோர
விவுளிமு கத்தவள் கொங்கை கொண்ட சண்ட மார்பைப்
பிளந்தன *

*இபரத துரக நிசிசரர் கெடவொ ருசூரனை மார்பு பீறி யவ
னுதி ரப்புனல் செங்க ளந்து ளங்கி யாடிச் சிவந்தன *

எவையெவை கருதி லவையவை தருகொ டையான்மணி
மேக ராசி சுரபிய வற்றொடு சங்க கஞ்ச பஞ்ச சாலத்தை
வென்றன (ஜ)

அசைவற நினையு மவர்பவ மகல வெமேல்வரு கால தூத
ரையுடையு மப்படி யங்கு மிங்கு மெங்கு மோடத் துரந்தன *

அகிலமு மெனது செயலல திலையெ னயானென வீறு
கூறி யறவுமி குத்தெழு மைம்பு லன்றி யங்கி வீழத் திமிர்ந்
தன *

அனலெழு துவச முடுகுல முதிர வியோமமு மேழு பாரு
மசலமு மிக்கபி லங்க ளுங்கு லுங்க வாலித் ததிர்ந்தன *

அடனெடு நிருதர் தளமது மடிய வலாரிதன் வானை யாள
வரசுகொ டுத்தப யம்பு குந்த வண்ட ரூரைப் புரந்தன *

அடவியில் விளவு தளவலர் துளவு குராமகிழ் கோடல்
பாட லலிமுரல் செச்சைய லங்கல் செங்க டம்பு நேசித் தணி
ந்தன *

அரியதொர் தமிழ்கொ டுரிமையொ டடிதொ ழுதேகவி
மாலை யாக வடிமைதொ டுத்திடு புன்சொ லொன்று நிந்தி
யாமற் புனைந்தன *

அழகிய குமர னுமைதிரு மதலை பகீரதி மாதர் வாழு மறுவர் ப்ரியப்படு கந்த னெந்தை யிந்த்ர நீலச் சிலம்பினன் *

அனுபவ னனக னனனிய னமல னமோகன னேக னேகனபினவ னித்திய னஞ்ச லென்ப்ர சண்ட வாகைப் புயங்களே. (க)

புயவகுப்பு முற்றிற்று.

---

பதினாறுவது

# சித்துவகுப்பு.

தனன தந்த தான தனன தந்த தான, தனன தந்த தான தனன தந்த தான *

தனன தனதான தானன தந்த, தனன தனதான தானன தந்த *

தான தானன தனதன தந்தன, தான தானன தனதன தந்தன *

தனன தானன தனதன தானன, தனன தானன தனதன தானன *

தனன தனந்தன தந்தன தானன, தனன தனந்தன தந்தன தானன *

தானன தனதன தானந் தந்தன, தானன தனதன தானந் தந்தன *

தனதன தனதன தனன தத்தன, தனதன தனதன தனன தத்தன *

தத்த தந்த தான தத்தானன, தத்த தந்த தான தத்தானன *

தனன தத்தான தனதன தந்தன, தனன தத்தான தன
தன தந்தன *

தானதன தானனு தாந்தன, தானதன தானனு தாந்
தன *

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன, தனத்தன
தனத்தன தனத்தன தனத்தன *

தான தாத்தன தத்தன தத்தன, தான தாத்தன தத்தன
தத்தன *

அடல்பு னைந்த வேலு மயிலு மென்றும் வாழி, யரிய
தொன்று கூற வருகி ருந்து கேண்மின் *

அளவில் பலகாய மோடாடி யண்ட, ரறிய விளையாட
லாமுலி யொன்றில் *

ஆசை வேறிலை யறுமுக வன்றிரு, வாணை மேருவை யடி
தலை கண்டனம் *

அகில லோகமு மடைவடை வேமுத, லருளி னுமைது சிவ
னறி யாதல *

அமையு மெனும்படி நின்றம னுரைத, மவைமு முதுந்தரு
வம்பத ருதுகொள் *

ஆதியு முடிவுமி லானந் தந்தரு, மாறிரு கரதல நாதன்
றந்தவை *

அவுஷத முளசில கிழுகி முப்பைக, ளரசிலை நறுவிலி கரிய
கக்கரி *

அத்தி செம்பி ராகை முட்காவலை, துத்தி சங்க மோரி தழ்
த்தாமரை *

அவுரி கற்றாழை யொடுவைகு றிஞ்சிலி, சிவிறி கத்தாரி
பொடுதலை சண்பகம் *

ஆரைகொடி வேலிவேல் காஞ்சிரம், வீரையிரு வேலிபே
ரீந்திலை

அழுக்கிணை யெருக்கிலை முருக்கிதழ் செருப்படை,யகத்தித
மரத்தைம தமத்தமொ டிபித்திகை *

ஆல மாத்திக டுக்கைகொ டிக்கழல், கோவி தேட்கடை
நெய்க்கொடை வக்கணை *

அகில்ப ரம்பை காரை துடரி தும்பை குரை, யலரி சம்பு
நாவன் மருது சிந்து வாரம் *

அறுகு தழுதாழை மாபாலை புன்கு, புரசு பழூயாகல்
பூலாவ ழிஞ்சில் *

ஆயி லாவிரை யிறலியி ரும்பிலி, யாடி யாவணி புடமிட
வென்றழை *

அவணி பாடல மணலம கீருக, மிவைச மூலமு மெழுபது
சாலடை

அதிம துரந்தக ரஞ்சிறு பாலடை, பதிமுக வெந்திய மி *
கய மோதகம் *

ஆறிடை யபினரி தாரங் கந்தக, நூறிடை திரிபலை
யோரொன் றெண்பலம் *

அதிவிட யமுமொழி கிருமி சத்ருவு, மனன்முறு கலுமற
முறுகு துத்தமும் *

அற்ப மொன்று கீரை வித்தேழிடை, யத்தி லொன்று
பாதி தக்கோலமும் *

அடவி கச்சோல கிமிளைக றும்பிசி, னரிதம் வெட்பாலை
யரிசிக ருங்கணி *

ஆமலக மேலநான் மூன்றிடை, சேமசிலை கூடலோ காஞ்
சனம் *

அரப்பொடி கடிப்பகை விடத்திர ணமப்பிர, கசத்தைச தருப்பிவி தைகொத்தம·லிதிப்பிலி *

ஆலி கோட்ட மெலிப்பகை சச்சிலே, நீலி காய்ச்சு நிலப் பனே கற்பிசின் . (வ)

மடல்சி வந்த தாழை மணவ சம்பு நீலம், வருகு ரும்பை கோட றுருசு சம்பி ராணி *

மரிசி வசவாசி காகீச மஞ்சண், மகிழ விதைமேதை மாமேதை குன்றி *

வாரி வாய்நுரை சயில சலம்புரி, பூரிவாதுமை சணவுபெ ருங்குமிழ் *

வடுவில் சீரக பலமயி ரோசனே, கடுகுரோகணி சிவிதைம ஞேசிலே *

வகைவ கைகொண்டொரு மண்டல மோரொடு, குகையி னிலெண்பது செம்பினி லூறவை *

வாதநல் வழிகள நேகம் பண்டையில், வாகட மலகுரு நாதன் றந்தது *

வழிபடு மரியர பிரம் ருட்பட, மொழிகிற வகையிது சிறிது பெற்றிலர் *

மற்று மிந்த்ர சால முச்சாடனே, மூற்று மிங்ஙனேத ரத்தா ழ்விலே *

மதலே யர்க்கிது மொழிவது பண்பல, கதவி னிற்ருழை யிடுபய மொன்றிலே *

வாலுழுவை யோரிகா ரம்பசு, வாலின்மயிர் கீரிதே வாங் கழை *

மரித்தவர் சணித்தகு ழியுப்புறு சலத்திலே, வடித்தினி தெ டுத்தொரு குடத்தினி னிறைத்துவை *

மாறி ரேத்திர வித்தைப வித்திடின், மாடை சேர்க்கவ ருத்தமு னக்கிலை *

மணம தின்று நாளை யெனமொ ழிந்து கேளு, மனைக ளெங்கு மோடி யினிவி ரைந்து தேடு *

வளையல் குழைபீலி காலாழி தண்டை, மணிவ யிரவீடு மே வீடு செம்பொன் *

வாளி பாடக மணிபிறை சங்கிலி, பாளை சூடக மயிலமி லம்பகம் *

மவுலி நூபுர மயிறிரு வாசிகை, சவடி தோள்வளை முக வளை மேல்வளை *

மரக தகுண்டலம் வெண்டய மேகலை, யரசி லைகம்பிகு றுங்குணி சாலகம் *

வாரணி யுடைமணி யாரங் கிங்கிணி, வாகுவ லயநெளி பீடங் கண்டிகை *

மணிமக ரிகைவளை திகிரி பட்டிகை, பணிகளி லழகிய பணிகள் கொக்கிகள் *

வட்ட வம்பொ ளேலை முத்தாவளி, சுட்டி சந்து காறை கைக் காறைகள் *

வடக முத்தோலை யரைவட முஞ்செறி, கடகம் வித்தார மகரநெ டுங்குழை *

மாதரணி தாலிநூல் காஞ்சன, மாலிகை மதாணிபீ தாம் பரம் *

மதிப்பரி யகைச்சரி சரப்பணி யிலைச்சினை, பதக்கமி வையுட்பட வணிப்பட லமிட்டுவை *

மாடை பாட்டிபு தைத்தகு டப்பண, மோடு கூட்டியு ருக் கவி ருப்புடன் (௭)

இடுப்ர சங்கி யாம னுலைய னந்த கோடி, யெரியில் வெந்திடாத கரிநி ரம்ப வேணும் *

இதுபழைய கவுரி பாஷாண வுண்டை, யிடுச கலவேதி பூநாக செம்பின் *

ஈய மாணதொ ரிரதமு மெண்பல, மேழுகோடியு மிரவுசி வந்திடும் *

யமுனை நீர்கொடு குகைபதி ஞயிர, மிறுக வேசமை நிலவறை யூடுவை *

எழுப தொடெண்பது வண்டியி லேபத, ரிடுகொ டுவந்து சொரிந்துகு வாலிடு *

யாமொழி படரச வாதந் தந்தன, நீசிவ குருவுப காரங் கண்டிரு *

இரதமொ டுருகிய சருகுபித்தனை, யிவையிவை குகைதொறு மிடைக றுக்கிவை *

எற்ற வந்தி ராது பொய்க்காளல, வெட்டி ரண்டு மாறு தப்பாதுகொள் *

எழுப தக்கோணி புடமுள செங்களம், ரணமு கத்தானை படையொடு வந்திரு *

ஈழம்வெகு கோடியா னீந்திட, வேழுநீல மாடநீ மேய்ந்துகொள் *

இபத்திர ளுரித்தன பருத்தன துருத்திக, ளிலக்கற வுனக்கரு கடுக்கிவை சடக்கென *

யாவும் வாய்ப்பது சத்யமு னக்கிவை, யேழு நாட்டரு மெத்தவி லைத்தனம் *

இறைவர் குன்ற மானை மணம கிழ்ந்த நாளி, வினையி லண்ட ரோடு முணவு கொண்ட தாகும் *

எமது பசிதீர மாராச விந்த்ர, வமுது படைபோத வாகாச
கங்கை *

யாறு போலநெய் சொரிவட கம்படை, நூறு சாலொடு
வொரியலை யிங்கழை *

இடுக மாவடு வடையிடை கீரையி, லவண மீறிய கறியடை
வேபடை *

இருப துதண்டையுடு ம்புகு வால்சமை, துருவை கள்பன்
றிச மைந்தவெ லாமழை *

யாமையை யழைமுய லாணங் கண்டறி, யோமிது சிவ
சிவ மேலெங் கும்படை *

இடைவெளி யறமிகு விடுக ருக்கலை, யிறவகை கயல்கெளி
றிவைபொ டித்தன *

எட்டு வண்டி வாளை யிப்பிலியி, லிட்ட முண்டு தியன் முற்
பாடழை *

இடைகொ ழுப்பாடி விளையவெ லும்புட, னடைசு ரைக்
காயி லடுபடை முன்கறி *

ஈறுபுளி வார்விடாய் போம்படி, யேடுபிரி யாதபா றேண
சொரி *

இருக்கிற சருக்கரை வருக்கைக தலிக்கனி, ரசத்தினை
யனைத்தையு மிலைக்குள டையப்படை *

ஈக பாக்குடன் வெற்றிலை கர்ப்புரம், யாரு மேத்த வினிச்
சுக முற்றிரு (ஆ)

யிடைத ரும்ப்ர வாள சடைபெ ரும்ப்ரவாக, விமலர் ஞொ
ன்றை மாலை தருண சந்த்ர ரேகை *

விரவு மணநாறு பாதார விந்த, விதர ணவிநோத மாதா
வின்மைந்தன் *

மீன கேதன னுருவின்மி குந்தரு, டான வாரிதி சரவண சம்பவன் *

விகிர்தி வேதனன் மவுனசு காதன, னகில காரண னகிலக லாதரன் *

விகசி தசுந்தர சந்தன பாளித, மிர்கம தகுங்கும கஞ்சப யோதரி *

வேழமு முழைகளு மாரும் பைம்புன, மேவுறு குறமகண் மேவுந் தின்புயன் *

விரிகட றுகளெழ வெகுளி விக்ரம,னரிதிரு மருமக னறுமு கத்தவன் *

வெட்சி கொண்ட தோளன் வெற்பூடுற, விட்ட வென்றி வேன்மு ழுச்சேவகன் *

விரவு நக்கீரர் சரணென வந்தருண், முருக னிட்க்ரோத முனிகுண பஞ்சரன் *

மேதகுபு ராணவே தாங்குர, ஞேதரிய மோனஞா ஞங குரன் *

மிகைத்தவர் பரத்ரய மெரித்தவர் ப்ரியப்பட, வகஸ்திய முனிக்கொரு தமிழ்த்ரய முரைத்தவன் *

வேத மூர்த்தி திருத்தணி வெற்புறை, சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளி *

வெகுளி வென்ற வேள்வி முனிவர் சங்க மேற, விரவு மித்ர லோக வழிதி றந்த மீளி *

மிகவி ருதுகூறு மேவார்கள் கண்டன், விகட வசுரேசர் சாமோது சண்டன் *

மேக வாகன மிகுமத வெண்கய, பாக சாதன னகரிபுரந் தவன் *

விபுத தாரகன் விபுததி வாகரன், விபுத தேசிகன் விபுதசி காமணி *

விபரி தகஞ்சவி ரிஞ்சப ராமுக, னபின வகந்தன டைந்த தவா தாபரன் *

மேருவை யிடிபட மோதுஞ் சங்க்ரம, தாரகன் மகுடவிபா டன் புங்கவன் *

வெயிலுமிழ் கொடியொடு வினைமு கத்தினின், மயின்மி சைவருமொரு வரத னிர்ப்பயன் *

வித்த கன்சு வாமி நிர்ப்பாவகன், சத்தி யன்ப்ர தாப வித் தியாதரன் *

விரத நட்பாளர் பரியும சஞ்சல, னிருத நிட்டூர னிருதர்ப யங்கரன் *

வீரமத லோகவேள் காங்கெயன், சூரரண சூரசூ ராந் தகன் *

வினைப்பகை யறுப்பவ னினைத்தது முடிப்பவன், மனத்து யா கெடுத்தெனை வளாத்தருள் கிர்பைக்கடல் *

வேலனை வாய்தத திருப்புகழ் கற்றவர், சில மேத்திய சித்த ப்ர சிததரே. (க)

சித்துவகுப்பு முற்றிற்று.

பதினேழாவது

## கடைக்கணியல்வகுப்பு.

தனதன தனந்த தத்த தனதன தனந்த தத்த தனதன தன ந்த தத்த தானனு *

அலைகடல் வளைந்து டுத்த வெழுபுவி புரந்தி ருக்கு மர செனை நிரந்த ரிக்க, வாழலாம் *

அளகைய ரசன்ற னக்கு மமரா ரசன்ற னக்கு மரசென
வுறஞ்செ லுத்தி, யாளலாம் *

அடைபெறு வதென்று முத்தி யதிமது ரசெந்த மிழ்க்கு
மருள்பெற நினைந்து சித்தி, யாகலாம் *

அதிரவ ருமென்று முட்ட வலகில்வி னைசண்டை நிற்க
வடலெதிர் புரிந்து வெற்றி, யாகலாம் (வ)

இலகிய நலஞ்செய் புட்ப கமுமுட னிறம்வெ ளுத்த விப
வர செனும்பொ ருப்பு, மேறலாம் *

இருவர வர்கின்றி டத்து மெவரெவ ரிருந்தி டத்துமொரு
வனி வனென்று ணர்ச்சி, கூடலாம் *

எமபடர் தொடர்ந்த ழைக்கி லவருட னெதிர்ந்து ளுட்க
விடியென முழங்கி வெற்றி, பேசலாம் *

இவையொழி யவும்ப லிப்ப தகலவி டுமுங்கள் வித்தை
யினையினி விடும்பெ ருத்த, பாருளீர் (கூ)

முலையிடை கிடந்தி ளைப்ப மொருமொகெ னவண்டி ரைப்ப
முகையவிழ் கடம்ப டுத்த, தாரினன் *

முதலிபெ ரியம்ப லத்துள் வரையச லமண்ட* பத்துண்
முனிவர்தொ ழுவன்று நிர்த்த, மாடினன் *

முனைதொறு முழங்கி யொற்றி முகிலென விரங்க வெற்றி
முறைநெறி பறந்து விட்ட, கோழியான *

முதியவு ணரன்று பட்ட முதியகு டாகனறு சற்று முது
கழு குபந்த ரிட்ட, வேலினன் (ஐ)

மலைமரு வுபைம்பு னத்தி வளருமி ருகுன்ற மொத்தி வலி
குடி புகுந்தி ருக்கு, மார்பினன் *

மழலைகள் விளம்பி மொய்த்த வறுவர்மு லையுண்டு முற்றும்
வடிவுடன் வளர்ந்தி ருக்கும், வாழ்வினன் *

மலையிறை மடந்தை பெற்ற வொருமத லையென்று தித்து
மலையிடி யவுந்து ணித்த, தோளினன் *
மயிலையு மவன்றி ருக்கை யயிலையு மவன்க டைக்க ணிய
லையு நினைந்தி ருக்க, வாருமே. (ச)

கடைக்கணியல்வகுப்பு முற்றிற்று.

---

பதினெட்டாவது

## சிவலோகவகுப்பு.

தனதன தனதன தனதன தனதன தந்தன தந்தந் தாத்
தன தந்தந் தனதானன *

உரகமு மிதழியு முதகமு முடுபதி யும்புனை யும்பஞ் சாட்
சரர் பங்கின், கொடிதாளினில் *

உலகமு மலைகளு முததியு முயிரும டஙகவொ டுங்கும் பார்
ப்பதி மைந்தன், கமலாலயன் *

உபநிட முடிவினு மிடபம தனிலுமு யங்கிவ யங்குஞ் சீர்ப்
பதி யொன்றென், றவிதாவெண *

உறைவிடு படையின னடலுடை நிசிசரர் தணடமு டைந்
தங காப்பெழு வங்கம, பொருசேவகன் (வ)

வரபதி சுரபதி சரவண மடுவினில் வந்தருள் கந்தன் காத்
திகெ யன்செங், கழுநீர்மலர் *

மருவிய குருபரன வனசரி பதயுக கஞ்சம்வ ணங்கும் பாக்
யக தம்பன், கருணைகரன் *

வடதரு விலையிலும் வெகுமுக மவுலிய னந்தனெ னுஞ்
செஞ் சேக்கையி லுங்கண், டுயின்மாதிரு *

மருமக னிமையவர் வழிபடு மணிபணி கிங்கிணி பண்கொண
டாததிசை கொஞ்சும், பதகுடிகை (௭)

அருவுரு வொழியவொ ரபினவ வடிவரு ளுந்தனி யுநதந
நிகைஷயெ னுங்குண், டலபூஷணம் *

அணிமய மெனுமொரு சிவிகையொ டதிகுண மஞ்சினு மஞ
சொன் ருக்கிய தென்பொங், கரியாசனம் *

அறநெறி முறைமையி லொழுகிய வழுகிய பண்பெனு மம
பொன சேர்த்தக லிஙகஞ், சயசாரமும் *

அவனவ ளதுவென மொழியவு மிலதொரு வடிவபிணி யுங
கொண் டாக்கமு மின்பங், களுமேதரும் (௮)

இரவலா மிடிகெட வுதவிய விதரண கஙகண மிங்கஙகாப
பிலெ னுஞ்சுங், தரகாகளம் *

எனதறு துறவினு முயர்கொடை யவிரத சஙகுல கெஙகுங
கேட்டுவெ ழுங்கும், பொறைமாமுர *

சிமையவர் கணமுனி கணமுட னினிதுட்ர பஞ்சமி றைஞ
சுங கீர்த்தித ரங்கங், திறல்வாரணம் *

இருவினை கெடவொரு நிரமய பரமவு ணந்தரு மின்பங்
தேக்கிய வன்பின, சிவலோகமே. (௧)

சிவலோகவகுப்பு முற்றிற்று.

---

பத்தொன்பதாவது

## மயில் வகுப்பு.

தானதன தந்ததன தானதன தந்ததன தானதன தந்ததன்,
தந்த தனன *

ஆதவனு மம்புலியு மாசுறவி ழுங்கியுமி ழாலமரு வும்ப
ணியி, ரண்டு மழுதே *

ஆறுமுக னைந்துமுக னானைமுக னெங்கடவு ளாமெனமொ
ழிந்தகல, வென்று விடுமே *

ஆகலிக டைந்தமுது வானவர ருந்தவரு ளாதிபக வுன்று
யுல, னந்தன் மணிசேர் *

ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணயகுருதி யாகமுழு துங்கு
லைய, வந்த றையுமே (௭)

வேதமுழு தும்புகலி ராமனொரு தம்பிமிசை வீடணை ருந்
தமையன், மைந்த னிகலாய் *

வீசுமர வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன் மேலிடியெனும்
படிமு, ழங்கி விழுமே *

மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக மேவுசர ணங்கொ
டுல, கெங்கு முழுமே *

வேலியென வெண்டிசையில் வாழுமுர கந்தளர வேய
ழலெ லுஞ்சினமு, டன்ப டருமே (௮)

போதினிலி ருந்தகலை மாதினைம ணந்தவுயர் போதனையிர
ந்துமலர், கொண்டு முறையே *

பூசனைபு ரிந்துகொடி யாகிமகி ழொன்றுதுகிர் போன்மு
டிவி ளங்கவரு, மஞ்ச மடுமே *

பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர் பூரணக ணங்க
ளொடு, வந்து தொழவே *

போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர் போயி
னமெ னும்படியெ, திர்ந்து விழுமே (௯)

கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில் கோல
வுட லங்கருகி, வெந்து விழவே *

கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள் கூடிமன
மஞ்சிவளை, சென்று புகவே *

கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு கோழி யொடு வென்றிமுறை, யும்ப கருமே *

கோலமுறு செந்திநகர் மேவுகும ரன்சரண கோகனத மன்பொடுவ, ணங்கு மயிலே. * (௧)

மயில்வகுப்பு முற்றிற்று.

---

இருபதாவது

# கொலுவகுப்பு.

தனதன தனதன தனதன தனதன, தனந்த தனனு தனந்த தனனு *

அருமறை யவன்முத லரியரன் மகபதி, யணங்க ளிமை யோ ரினங்க ளொருபால் *

அருணனு மதியமு மனலெழு கனலியு, மணங்கி னுடுக்கும் கணங்க ளொருபால் (௨)

வருணனு நிருதியும் வழியொடு தனதனு, மகிழ்ந்து மிகவே புகழ்ந்த தொருபால் *

வயிரவ ரொடுபடை ருவணரு முரகரும், வரங்கள் பெறவே யிரங்க வொருபால் (௩)

இருடிக ளெவர்களு மினியகி னரர்களு, மிணங்கி யெதிரே வணங்க வொருபால் *

இபமுக வனுமெழி விளவல்க ளனைவரு, மியன்ற நெறியே முயன்ற தொருபால் (௪)

உருமலி குறளின மொடுவெகு முகமுக, னுறைந்து பரிவாய் நிறைந்த தொருபால்

உடுவொடு நடவுப னிருவரு முறைமுறை, யுகந்து தொழுவே மிகுந்த தொருபால் (க)

அடல்விடை முகனறை கதையுற வெகுசன, மதுங்கி யருகே யொதுங்க வொருபால் *

அயன்முடி திருகிய வயவனு நியமமொ, டடங்கி வலமே தொடங்க வொருபால் (கவ)

மடல்புனை புகரொடு வருபதி னொருவரு, மருங்கி னுறவே நெருங்க வொருபால் *

மருவொடு துவரிரு வருமிசை வலமொடு, வசிந்து மனமே கசிந்த தொருபால் (கம)

மிடலிறை விறலரி விமலர்க ளருள்சுதன், வியந்து விரைவாய் நயந்த தொருபால் *

வெயில்விரி சுடரவன் மகனொடு மதிமகன், விளம்பு முறையே கிளம்ப வொருபால் (கஅ)

உடலொளி மவுனிக ளுடனுப னிடசரு, முளங்கு ளிரவே விளங்க வொருபால் *

உமைதிரு மகணில மகள்கலை மகளொடு, முகந்தெ வருமே தொகுந்த தொருபால் (உ)

அதிபகி ரதிபயி ரவிபக வதிசசி, யரம்பை யருமே நிரம்ப வொருபால் *

அழகிய கவுரியொ டிலகிய வலவையு, மடைந்து தயவாய் மிடைந்த தொருபால் (உவ)

மதியர சருநிறை வசியரும் வினைஞரு, மலிந்து முகமே பொலிந்த தொருபால் *

வருசிவ னடியவ ரரகர வெனமுறை, வழங்கு கடல்போன் முழங்க வொருபால் (உ௪)

விதிமுறை கருதியை வகைபுரி கருவிகள், விளைந்த வொ
லிவா னளைந்த தொருபால் *

விதமுட னபிநய வணிதையர் சதிமுறை, விரிந்த நடமே
புரிந்த தொருபால் (உஅ)

உதிர்தரு மலர்விரை யுறுபுகை மிர்கமத,முமிழ்ந்த மணமே
கமழ்ந்த தொருபால் *

ஒழுகிய கிரிதொடு பணிதம தபெசுட, ருவந்த வொளியே நிவ
ந்த தொருபால் (௩)

அரியக டெனமுக டளவிய வொருகுடை, யமர்ந்த நிழலே
சமைந்த தொருபால் *

அருமட வனமென விருபுடை கவரிக, ளசைந்த வழகே
யிசைந்த தொருபால் (௩௰)

வரிசைசெய் துயிலொடு வனமயில் சிவிறியின், வயங்கு
சிறுகா லியங்க வொருபால் *

மறுகட லினிலெழு நிறைமதி யமுதென, வரிந்து பனிநீர்
சொரிந்த தொருபால் (௩௨)

விரியிருள் வலிதரு கிரணம தெனநல, மிகுஞ்சு ழலில்வீசு
குஞ்ச மொருபால் *

வியன்மர கதமணி மிளிர்தரு களசெதிர், விரைந்து நிரை
யாய் நிரைந்த தொருபால் (௩௪)

உரியவெ ளிலையுட னுயரிய கமுகினி, லுகுந்த கனியே பகு
ந்த தொருபால் *

உலகுள வனிதைய ரவரவர் விரதமொ, டுணர்ந்து கனியே
கொணர்ந்த தொருபால் (௩௬)

அறுகதி ரவரென வறுமணி மவுலிக, ளடர்ந்து வெயிலே
படர்ந்த தொருபால் *

அறுமதி யெனவறு திருமுக சததள, வலர்ந்த மலரே மலர்
ந்த தொருபால் (௪௮)

மறுவறு கடலென மருவுப னிருவிழி, வழிந்த வருளே
பொழிந்த தொருபால் *

வனை தரு மகரமு மணியணி பணிகளும், வயங்கு குழையே
தயங்க வொருபால் (௪௯)

இறுகுபொன் மலையொடு மிடறுப னிருபுய, மிசைந்து
நெடுவா னசைந்த தொருபால் *

எழிலிமை யனையப னிருகையி லயின்முத, விலங்கு படை
மய துலங்க வொருபால் (௫௦)

உறுவரை யருவியை நிகர்தரு முரமிசை, யுடன்கொள் புரி
நூல் கிடந்த தொருபால் *

உருமென விகலிமு னெதிர்பொரு மவுணரு, ளுடைந்த
வுடைவாள் சிறந்த தொருபால் (௫)

அனவர தமுமறை முறையிடு பரிபுர, மலங்கு மிருதாள்
குலுங்க வொருபால் *

அளவறு கலவியின் முழுகிய குறமக, ளமர்ந்து ளொயி
லாய் நிமிர்ந்த தொருபால் (௫௪)

வனதரு வினிலுறை சதமக னருண்மகள், வதிந்து மணமே
பொதிந்த தொருபால் *

வருமடி யவரிடம் வலியச னதம்வர, வளர்ந்த சபையேகி
ளர்ந்த தொருபால் (௫௫)

நினைவொடு பணிபவர் வினைதுகள் படவெதிர், நினைந்து
திருநீ றணிந்த தொருபால் *

நிறைமல ரொடுநல கலவையு முயர்குரு, நினைந்து தரவே
புனைந்த தொருபால் (௫௬)

தினகர னுலவுச னிதியினி லிரவலர், தெளிந்த தமிழே பொழிந்த தொருபால் *

சிவபர கிரியினி லொருசிவன் வடிவொடு, திருந்த முருகோ னிருந்த கொலுவே. (சா)

கொலுவகுப்பு முற்றிற்று.

இருபத்தொராவது

## வீ ர வா ள் வ கு ப் பு.

தானனு தத்ததன தானன தத்ததன, தானனு தத்ததன தந்தனுத் தனன *

பூவுளோ னுக்குமுயர் தேவர்கோ னுக்குமெழு, பூவில்யா வர்க்கும்வரு துன்புதீர்த் திடுமே *

பூதசே னைக்குளொரு கோடிசூர் யப்ரபை, போலமா யக்க ரிய கங்குனீக் கிடுமே *

பூதிபூ சிப்பரமர் தோலைமே விட்டதொரு, போர்வைபோ னெட்டுறை மருங்குசேர்த் திடுமே *

போரிலே நிர்த்தமிடு வீரமா லக்ஷ்மிமகிழ், பூசைநே சித்து மலர் தும்பைசாத் திடுமே (வ)

பாவரு பக்கொடிய சூரனுர் பெற்றபல, பாலர்மா ளத்த சைக ளுண்டுதேக் கிடுமே *

பானுகோ பப்பகைஞன் மேனிசோ ரக்குருதி, பாயவே வெட்டியிரு துண்டமாக் கிடுமே *

பாடுசேர் யுத்தகள மீதிலே சுற்றுநரி, பாறுபேய் துய்த்திட நிணங்களூட் டிடுமே *

பாடியா டிப்பொருத போரிலே பத்திரக, பாவிகு லப்ப டையை வென்றுதாக் கிடுமே (ல)

ஆவலா கத்துதிசெய் பாவலோர் மெய்க்கலிக, ளாமகோரக் கஜாக ஜாந்துநீக் கிடுமே *

யாருமே யற்றவனென் யீதொரா பத்துறவ, ராமலே சுற்றி ஜுமி ருந்துகாத் திடுமே *

ஆடல்வே ணற்படைக ளாணையா வுக்குமுத, லாணையா வைத்துவலம் வந்துபோற் றிடுமே *

ஆலகா லத்தைநிகர் காலகு லத்தையும, ருதபா சத்தையும ரித்துபோட் டிடுமே (எ)

மேவலார் முப்புரமு நீறவே சுட்டவொரு, மேருவாம் விற்பரமர் தந்தபாக் கியவான் *

வேடர்மா னுக்குமுயர் தேவயா னைக்குமிசை, வேலர்தா ளைத்தொழுது யர்ந்தவாழ்க் கையினன் *

வீறுசேர் மிக்ககண நாதனு ரெட்டுவகை, வீரர்நே யத்தமைய னென்றதோட் டிணைவன் *

மேன்மையாம் லக்ஷரத வீரர்பூ சிக்கவரு, வீரவா குத்தலைவன் வென்றவாட் படையே. (க)

வீரவாள்வகுப்பு முற்றிற்று.

---

இருபத்திரண்டாவது

## சி வ கி ரி வ கு ப் பு.

தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த, தனதானனு *

மெத்த மெத்த வக்ர மத்தின் மெத்த மெத்த விக்ரமத்தின் மெத்த மெத்த வுக்ர வெற்றி, மிகுபாசமே *

விட்டு விட்டு றுக்கு றுக்கு கட்டு கட்டு குத்து குத்து
வெட்டு வெட்டெ னச்சி னத்து, நமனுடியே (வ)

சத்த மிட்ட தட்டி நெட்டெ யிற்றி னைக்க டித்து றுக்கு
தர்க்க மிட்டெ னைப்பி டிக்க, வருபோதிலே *

தத்த ளிக்கும் புத்தி யைத்தி டப்ப டுத்தி யொத்திடத்தணி
ப்பு றுத்தி மெய்த்து ணைக்கு, வரவேணுமே (௭)

எத்த லத்து மெப்ப திக்கு மெப்ப டிக்கு மெச்ச ரித்து நற்ப
தத்தை யுச்சரிக்கு, நினைவாகியே. *

இட்டம் வைத்த வர்க்க நுக்ர கச்ச முத்ர வித்தை யிற்ப்ர
சித்த நித்ய முத்த மிழ்க்கு, மருள்போதனே (ஆ)

அத்ர பத்ர சித்ர மிட்ட யிற்ப டைத்த யிற்கி ணைத்த லர்க்
கணுற்ற பொற்கு றத்தி, மணவாளனே *

அத்த னுக்கு மைக்கி தத்த புத்ர சித்தி முத்தியைச் செயற்பு
தச்சி வக்கி ரிக்குண், முருகேசனே. (௯)

சிவகிரிவகுப்பு முற்றிற்று.

---

இருபத்துமூன்றுவது

## திருச்செந்தில்வகுப்பு.

தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த, தனதானன *

சந்த பந்த மு[illegible]து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சங்க மங்க லம்பொ ருந்து, தமிழ்பாடியே *

தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்ச வஞ்
சர் தங்கண் முன்பு நின்று நின்று, மெலிவோதியே (வ)

சிந்தை நொந்து நொந்து நைந்து நைந்து வெம்பி வெம்பி
யங்கி சிந்தி யிந்த வெங்கு டம்பை, யழிபோதுமா *
சிங்க முன்பு குந்த தந்தி யின்கு லங்க லங்கு பண்பொ
சிந்த துன்ப மென்ற ழிந்து, கரையேறுவேன் (உ)

அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
சைந்த சைந்து பந்தெ ழும்ப, வசுராதியோர் *
அங்க டங்க மண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த, வடர்கோபனே (ஜ)
கந்த சந்த துங்கு கும்ப கொங்கை யிந்தி ரன்ம டந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி, யணிநேயனே *
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி ருந்தி டுந்தி றஞ்செ றிந்து கஞ்ச
நன்ற லர்ந்த செந்தின். முருகேசனே. (க)

திருச்செந்தில்வகுப்பு முற்றிற்று.

---

இருபத்துநான்காவது

## திருப்பழனிவகுப்பு.

தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன தந்தனன
தந்தனன, தனதானன *

எந்தவினை யும்பவமு மெந்தவிட மும்படரு மெந்தவிக
லும்பழியு மெந்தவழு வும்பிணியு மெந்தவிகழ் வுங்கொடிய
வெந்தவசி யுஞ்சிறிது, மணுகாமலே *
எந்தவிர வுந்தனிமை யெந்தவழி யும்புகுத வெந்தவிட
முஞ்சபையி லெந்தமுக மும்புகலு மெந்தமொழி யுந்தமிழு
மெந்தவிசை யும்பெருமை, சிதறாமலே (வ)

வந்தனைசெய் துன்சரண நம்புதல்பு ரிந்தவருள் வந்தனுதி
னந்தனிலு நெஞ்சினினை வின்படிவ ரந்தரவு வந்தருளி தம்
பெறுவ தன்றிநெடு, வலைவீசியே *

வஞ்சவிழி சண்டனுறு கின்றபொழு துங்குமர கந்தவென
நன்கறைய வுந்தெளிவு தந்துயிர்வ ருந்துபய முந்தனிமை யுந்
தவிர வஞ்சலெனை, வரவேணுமே (௨)

தந்தனன தந்தனன டிண்டிகுடி டிண்டிகுடி குண்டமட
குண்டமட மண்டமென நின்றுமுர சந்திமிலை பம்பைதுடி
திண்டிமமு ழங்குமொலி, திசைவீறவே *

தண்டவமர் மண்டசுரர் மண்டைநிண மென்றலகை யுண்டு
மிழ்தல் கண்டமர ரிந்திரன்வ ணங்குபத தண்டைசிறு கிங்கி
ணிபு லம்பிடவ ரும்பவனி, மயில்வாகனு (௩)

செந்தளிரை முந்துபட மென்றுளம ருண்டுகிறை சந்தனவ
னங்குலவு மந்திகுதி கொண்டயல்செ றிந்தகமு கின்புடைப
துங்கிடவ ளைந்துகிமிர், மடல்சாடவே *

சிந்தியவ ரம்பைபல வின்கனியில் வந்துவிழ மென்கனியு
டைந்தசுளை விண்டுகறை கொண்டுசிறு செண்பகவ னங்கள்
வளர் தென்பழனி யம்பதியின், முருகேசனே. (௪)

திருப்பழனிவகுப்பு முற்றிற்று.

---

இருபத்தைந்தாவது

## திருப்பரங்கிரிவகுப்பு.

தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன

தான தந்தன தான தந்தன தான தந்தன தான தந்தன,
தனதானன *

சாதி யுங்குல மாவ துங்குடி யாவ துஞ்சன மாவ துவ
கிளை தார முந்திர பால ரும்பிர தான மும்பெரு காண்மை யும்
பெறு தான மும்பசு மான முஞ்சிவ ஞான மும்பல கோல
மும்புரி, தொழிலோடுமே *

தாழ்வ கன்றிடு வாழ்வும் வெம்பிணி நோயு மங்கதி லாதுர
ந்தனி லாவ துந்தளர் சாவொ ழிந்திடு யோக முஞ்சிவ பேறு
மெந்தநி தான முஞ்செய்த ராசு கண்டது போல்வ ரும்பொது
வாகு மென்றுண, திருதாளையே (௪)

ஓதி னெஞ்சய ரார்தி னங்கிரி கால முந்தொழு வோர்வி ரும்
பிய தேது மன்புட னேத ருங்கிர்பை யாக வந்தனு பூதிதந
துமு னூல்க டந்திட வேபு ரந்தருள் கூரு மிங்கித சேவை
நம்பிய, படிகாணவே *

ஓகை வந்தனை யாய்வ ணங்கிய வேழை சிந்தையு ளேகினை
ந்திடு வேளை வந்தினி தாய்வ ரந்தர வேணு மௌனக மேவ
ருந்தியு மோதி னன்றின நான்வி ளம்புத னிய றிந்துமிதேனி
ரங்கிலை, யறிவேனையா (௫)

ஆதி யந்தம ஞாதி விந்துவு நாத மும்பிரி யாநி றைந்தவ ரூப
வின்பசொ ரூப சுந்தர சோதி மின்பொலி நீதி யம்பொரு ளாக
நின்றப ராப ரன்கரு ணால யன்புல வோரி றைஞ்சிட, வெதிர
காளிவா *

தாட வின்செக சேகி ணங்கிண சேகு டுண்டம டாட மண்
டம தாகி ணங்கிண தோதி ணங்கிண தாதி மிந்திமி தோவெ
ஞுந்தொனி யார்சி லம்பொலி தாள மிஞ்சிட வேந டம்புரி
யாத நம்பர, னருள்பாலனே (௬)

மாதி ரந்திசை யாக வந்திக டாச லந்திரை மாச லம்புவி
மாக மண்டக டாக மும்பொனின் மேரு வின்றலை யேகு லுங
கிட வாச மொன்றிய கால்பொ ருந்துகள் வானி ரம்பிட வெவ
ருங கதிர், வடிவேலனே *

வான ரங்கதிர் தாவு தண்டலை மேவு கொண்டலை யூடுநின
றலை மாவி னங்களி கூரு நண்பொடு கோக நஞ்செறி பால
வாரிகழ போசி றந்திரு மூவர் விஞ்சையர் சூழப ரங்கிரி,
முருகேசனே. (க)

திருப்பரங்கிரிவகுப்பு முற்றிற்று.

## திருவகுப்பு முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன்றிருவடிவாழ்க.